வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

மாருதி Money Exchange (Pvt) Ltd.
MARUTHI MONEY EXCHANGE
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றும்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றும்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 24.03.2022 வியாழக்கிழமை | இதழ் : 109 | பக்கங்கள் : 16



நாட்டில் பொருட்கள் விலையேற்றத்தைக் கண்டித்து தேசிய மக்கள் சக்தி நேற்று கொழும்பு – நுகேகொடையில் மக்கள் அணிதிரண்டனர்.

# புலம்பெயர் தமிழர்களுக்கு மீண்டும் ஜனாதிபதி அழைப்பு

## அமெரிக்க உதவி செயலருடனான சந்திப்பில் விடுத்தார்



கொழும்பு, மார்ச் 24

புலம்பெயர் மக்களுடன் கலந்துரையாடல்களை நடத்த ஆர்வமாக உள்ளேன். வட மாகாணத்தின் அபிவிருத்தியில் முதலீடு செய்யுமாறு அவர்களுக்கு அழைப்பு விடுக்கிறேன் - இவ்வாறு தம்மை சந்தித்த அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான உதவி செயலாளர் திருமதி விக்ரோறியா நூலண்டிடம் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

15

# மாகாண சபை தேர்தலை விரைந்து நடத்துங்கள்

## அமெரிக்கா வலியுறுத்து



கொழும்பு, மார்ச் 24

மாகாண சபை தேர்தலை நடத்துமாறு வெளிவிவகார அமைச்ருடனான சந்திப்பில் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான துணைச் செயலர் விக்ரோறியா நூலண்ட் வலி யுறுத்தியுள்ளார்.

15

## நாட்டில் அமைதியை நிலைநாட்ட ஆயுத படைகளை வரவழையுங்கள்

### ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, மார்ச் 24

நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்காக ஆயுதம் தாங்கிய முப்படையினரை வரவழைக்குமாறு ஜனாதிபதி விசேட உத்தரவு பிறப்பித்துள்ளார். ஜனாதிபதியின் இந்த உத்தரவு குறித்து பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நேற்று காலை பாராளுமன்றத்திற்கு அறிவித்தார்.

பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 40) 12ஆவது சரத்தின் மூலம் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய ஜனாதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

## சர்வகட்சி மாநாட்டில் கோபமடைந்த ரணில்

### மன்னிப்புக் கோரினார் ஜனாதிபதி

கொழும்பு, மார்ச் 24

“நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள இந்நிலைமைக்கு யார் பொறுப்பு கூறவேண்டும் என்பது பற்றி ஆராய நாம் இங்கு வரவில்லை. அவ்வாறு ஆராய்ந்தால் வேறு பிரச்னைகள் பற்றி கதைக்க முடியாது. இறுதியில் விஜய மன்னர் இங்கு வந்திருக்காவிட்டால் பிரச்னை இருந்திருக்காது என்ற முடிவுக்கு தான் வரவேண்டியிருக்கும்.”

15

## ‘வற்’ வரியை 18 வீதமாக அதிகரிப்பதற்கு ஒப்புதல்!

கொழும்பு, மார்ச் 24

பெறுமதி சேர் வரியை (வற்) 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக அதிகரிப்பதற்கு பொது நிதிக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

தொற்றுநோய் மற்றும் பொது அவசர காலங்களில் இறக்குமதி செய்யப்படும் மருத்துவ உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் மருந்துகளின் நன்கொடைகளுக்கு வரி விலக்கு உண்டு.

2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தை திருத்துவதற்கான வரைவு பொது நிதிக் குழுவில் நிறைவேற்றப்பட்டது.

பொது நிதி தொடர்பான குழுவின் தலைவர் அநுர பிரியதர்ஷன

15

## நுகர்வோர் அதிகார சபை யாழில் திடீர் பரிசோதனை!

### எரிவாயு முகவர்களுக்கு புதிய அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ். மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அதிகாரிகள் நேற்று திடீர் பரிசோதனைகளை எரிவாயு மற்றும் எரிபொருள் விற்பனை முகவர் நிலையங்களில் நடத்தினர்.

அரச அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த பரிசோதனைகள் இடம்பெற்றன என்றும் இதன்போது, லிட்ரோ, லாப்ஸ் எரிவாயு முகவர்களுக்கு சில அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன எனவும் அவர்கள் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

15

## பட்டினியில் வாடும் மக்களுக்கு உடன் நிவாரணம் வழங்குங்கள்!

### ஜனாதிபதியிடம் சுமந்திரன் கோரிக்கை

கொழும்பு

“நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான பொதுப் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும். பட்டினியில் வாடும் மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.”

- இவ்வாறு தமிழ்த் தேசியக்

15

## தமிழர் அபிலாசையை தீர்ப்பதே நாட்டை மீட்பதற்கான ஒரே வழி!

### சித்தார்த்தன் ஜனாதிபதிக்கு கடிதம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

2009 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளை தோற்கடித்த பின்னரும்கூட, தமிழ் மக்களின் மனதை வெல்வதற்கான எந்தவோர் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் மேற்கொள்ளவில்லை - இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

15

## நெருக்கடிக்கு தீர்வு காண அனைவரும் இணையுங்கள்

### கலந்துகொள்ளாதோருக்கும் ஜனாதிபதி அழைப்பு

கொழும்பு, மார்ச் 24

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண, அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டுமென்று, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். குறுகியகால மற்றும்

15



## ஆறரை மணிநேரம் இன்று மின்வெட்டு!

கொழும்பு, மார்ச் 24

நாட்டில் இன்று வியாழக்கிழமை 6 மணித்தியாலமும் 20 நிமிடங்களும் மின்வெட்டு நடைமுறையில் இருக்கும் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பி, கியூ, ஆர், எஸ் வலயங்களில் காலை 8.30 மணி

15

## இப்படியும் நடக்கிறது...!

ஜனாதிபதி கூட்டியிருந்த சர்வகட்சி மாநாடு ஒரு சில சிறிய கட்சிகளுடன் நடந்து முடிந்திருக்கின்றது.

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிகள் குறித்து ஆராய சர்வ கட்சிக் கூட்டத்தை கூட்டுங்கள் என்று மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சியே ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

ஜனாதிபதியை கடைசியாகச் சந்தித்த சுதந்திரக் கட்சி தூதுக் குழு விடுத்த இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டே நேற்றைய கூட்டத்துக்கு அவர் அழைப்பு விடுத்திருந்தார்.

ஆனால், இந்த கூட்டத்தில் கலந்துகொள்வதில்லை என்று அநேகமாக எல்லாக் கட்சிகளும் தீர்மானித்து அறிவித்திருந்தன.

தங்களோடு கலந்தாலோசித்துவிட்டு, நாட்டில் ஏற்பட்டிருக்கும் நிலைமைக்கான பொறுப்பை தம்மீது சுமத்துவதற்காகவே இந்தக் கூட்டம் கூட்டப்பட்டிருப்பதாவும் அதனாலேயே தாம் பகிஷ்கரிப்பதாகவும் அநேகமாக எல்லாக் கட்சிகளும் கையை விரித்திருந்தன.

இந்தக் கூட்டத்தைக் கூட்டுமாறு சுதந்திரக் கட்சி கேட்டுக்கொண்டது, மற்றைய கட்சிகளினதும் ஆலோசனைகளைப் பெற்று இந்த நெருக்கடியை தீர்க்க முயலுங்கள் என்றுதான்.

அதாவது, நெருக்கடியை தீர்க்க மற்றைய கட்சிகளிடம் ஆலோசனை இருக்கும் என்ற நம்பிக்கையில்தான், சுதந்திரக் கட்சி இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கலாம்.

ஆனால், அப்படி அவர்களிடம் ஆலோசனை இருந்திருந்தால், அதனை இந்த அரசு செயல்படுத்தி அதன்மூலம் நாட்டின் பிரச்னையை தீர்த்துவிட்டால், அது இந்த அரசாங்கத்தின் வெற்றியாகப் போய்விடும் என்று எதிர்க்கட்சிகள் கருதியிருக்கலாம். அதனாலேயே கூட்டத்தைப் பகிஷ்கரிக்க முடிவெடுத்திருந்தனவோ தெரியவில்லை.

இந்த அரசாங்கத்தை வீட்டுக்குப் போகுமாறு, அதாவது அரசாங்கம் பதவியிலிருந்து விலகவேண்டும் என்றே எல்லாக் கட்சிகளும் கூறிக்கொண்டிருக்கின்றன. இன்னும் சிலர் கோட்டாபய ராஜபக்ஷ பதவியை சஜித்திடம் ஒப்படைக்கவேண்டும் என்றும் சிறுபிள்ளைத்தனமாக கோரிக்கை விடுக்கின்றனர்.

இன்று ஜனாதிபதி பதவியிலிருந்து விலகினாலும், அவர் தான் விரும்பிய ஒருவருக்கோ அல்லது எதிர்க்கட்சிகள் கேட்கின்ற ஒருவருக்கோ பதவியை ஒப்படைக்க முடியாது. பாராளுமன்றமே அடுத்த தலைவர் யார் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். இன்றும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்துடன் இருக்கும் பொதுஜன முன்னணிதான் இன்னுமொருவரை தெரிவு செய்யவேண்டும்.

இனி புதிய அரசு ஒன்று மக்கள் தெரிவுடன் அதாவது தேர்தல் ஒன்றின் முலம் தெரிவுசெய்வதெனில், யார் ஒருவர் இன்றைய பொருளாதார நெருக்கடியை எப்படி சமாளிப்பார் என்பதை மக்கள் முன்வைத்து, அதற்கு மக்களின் நம்பிக்கையைப் பெற்றலால்தானே வெற்றிபெறமுடியும்.

இதுவரை அரசின் தவறுகள் குறித்தே எதிரணியில் உள்ள அனைவரும் பட்டியல் இடுகின்றனரே தவிர, யாரும் இந்த நெருக்கடியை எப்படி தீர்க்கலாம் என்று யோசனை சொன்னதாகத் தெரியவில்லை.

ஆனால், நமது தமிழ் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மாத்திரம் அந்தக் கூட்டத்தை பகிஷ்கரித்தாலும் பாராளுமன்றத்தில் அரசுக்கு நல்ல யோசனை ஒன்றைத் தெரிவித்திருக்கிறார்.

“புலம்பெயர் தமிழர்கள் உலகில் பல செல்வந்த நாடுகளில் உள்ளனர், அவர்களிடத்தில் இந்த நாட்டை மீட்கும் செல்வம் உள்ளது. அவர்களை இணைத்துக்கொண்டால் இன்றைய நெருக்கடி நிலைக்கு தீர்வு கிடைக்கும். ஆனால், அதற்கு நீங்கள் இடம் கொடுக்கவில்லை, இனவாதத்தை வளர்த்துக் கொண்டுள்ளீர்கள். இலங்கையில் இனவாதம் பரப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றது.“

மேற்கண்டவாறு கஜேந்திரகுமார் யோசனை சொன்னதைக் கேட்டதும் இந்த ஊர்க்குருவியின் யோசனை ஒன்றுதான் ஞாபகத்துக்கு வந்தது.

அண்மையில், யாழ்ப்பாணம் வந்திருந்த அரச வங்கி ஒன்றின் தலைவருடன் கதைத்துக் கொண்டிருந்துபோது, அவர் புலம்பெயர் தமிழர்கள் தாங்கள் அனுப்புகின்ற பணத்தை ஹவாலா மூலம் அனுப்பாமல் அனுமதிபெற்ற பணமுகவர்கள் மூலம் அனுப்பினாலே நாட்டின் அரைவாசிப் பிரச்னை முடிந்துவிடும் - என்றார்.

அப்போது அவரிடம் இந்த ஊர்க்குருவி ஒரு கேள்வியைக் கேட்டது.

கடலில் மண்ணை நிரப்பி ஒரு நிலப்பரப்பை சீனாவிடம் கொடுத்து அதற்கு தனியான அதிகாரங்களையும் வழங்க முடியும் என்றால், பத்து லட்சம் புலம்பெயர் தமிழர்களும் தலைக்கு ஆயிரம் டொலர்களை வழங்கினால் ஒரு பில்லியன் டொலர்கள் வந்துவிடுமே, சீனாவிடமும் இந்தியாவிடமும் நாட்டை அடைவு வைப்பதற்கு பதிலாக உங்கள் நாட்டின் பிரஜைகளிடமே வைக்கலாமே. ஒரு மாதம் என்ன ஆறு மாதங்களுக்கு தொடர்ந்து உதவுங்கள் என்றால் நாட்டின் முழுப்பிரச்னையும் தீர்ந்துபோகும்” என்றேன்.

அவரால் சிரிக்க மட்டுமே முடிந்தது. அதற்கு என்ன செயய்யலாம் என்றார் சமாளித்துக்கொண்டே.

முதலில் அவர்களின் மனநிலையில் தாங்களும் இலங்கையர்கள் என்ற மனநிலையை ஏற்படுத்த வேண்டும் என்றேன்.

நாட்டை பக்கத்து நாட்டவர்களுக்கு விற்றாலும் விற்போமே தவிர உங்களிடம் மண்டியிடமாட்டோம் என்பது போல இருந்தது அவரின் உடல்மொழி.!

**- ஊர்க்குருவி**

# எதிர்க்கட்சி குப்பைக்கு சமன் ஒருபோதும் இணையமாட்டேன்!

## வாசுதேவ நாணயக்கார

கொழும்பு, மார்ச் 24

“நான் இப்போதும் அரசில்தான் இருக்கின்றேன். குப்பைக்கு சமமான எதிர்க்கட்சியில் ஒருபோதுமே இணையமாட்டேன்”, என அரச பங்காளிக் கட்சித் தலைவரும் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழான 2251/48, 2262/50 மற்றும் 2266/5 இலக்க வர்த்தமானப் பத்திரிகையின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மீதான உரையாற்றுகையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த விவாதத்தில் ஒழுங்கு விதிகளை காணிகள் அமைச்சர் சந்திரசேன சமர்ப்பித்து உரையாற்றிய போது அவரிடம் பல குறுக்கீட்டுக் கேள்விகளை எழுப்பிய அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தொடர்ந்து காணிகள் அமைச்சரை திக்கு முக்காட வைத்துக்கொண்டி ருந்தார்.

இந்நிலையில் தனது உரையிலும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார காணிகள் தொடர்பான ஒழுங்குவிதிகள் தொடர்பில் விமர்சனங்களை முன்வைத்தார். இதன்போது எதிர்க்கட்சியினர் அரசாங்கத்தின் ஏனைய பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான அண்மையில் அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்கப்பட்ட விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில தொடர்பில் கேள்விகளை எழுப்பினர். அத்துடன், அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவையும் எதிர்க்கட்சிப் பக்கத்துக்கு வருமாறு அழைப்பு விடுத்தனர்.

இதன்போது ஆவேசமடைந்த அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, விமல், உதய ஆகியோர் நிலைப்பாடு தொடர்பில் நீங்கள் அவர்களிடமே கேட்க வேண்டும். அவர்கள் அமைச்சுப் பதவிகளிலிருந்து மட்டும்தான் நீக்கப்பட்டிருக்கின்றார்கள். நான் இப்போதும் அரசாங்கத்தில்தான் இருக்கின்றேன். அரசாங்கத்திலிருந்தவாறு சுயாதீனமாக செயல்பட விரும்பினால் அரசுக்கு அறிவித்து விட்டு அவ்வாறு செயல்படுவேன். அதனை விடுத்து குப்பைக்கு சமமான எதிர்க்கட்சியில் ஒருபோதுமே இணைய மாட்டேன். நீங்களும் ஒரு போதுமே ஆட்சிக்கு வர முடியாது - என்றார்.

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், மார்ச் 23

கொரோனா தொற்று நீங்கவும் அனைத்து மக்களும் நோய்களிலிருந்து மீண்டு சுபீட்சமான வாழ்வு வாழவும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் அருளாசியுரையும் வேதபாராயண நிகழ்வும் நாளை வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில், கிளிநொச்சி பிரமந்தனாறு மயில்வாகனபுரம் மூத்த விநாயகர் ஆலயத்தின் பிரதம குருக்கள் சாமஸ்ரீதேசமான்ய சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீஸ்காந்த ராஜக்குருக்கள் அருளாசி உரையையும் வேதபாராயணமும் வழங்குவார். இது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம் பெறவுள்ளது.

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 23

சிறுப்பிட்டி அண்ணாமார் அறநெறிப் பாடசாலையில் நாளை வெள்ளிக்கிழமை பி.ப.3.30 மணிக்கு சிறப்பு சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

இதில், “சைவத்தின் காவலர் நாவலர்” எனும் தலைப்பில் இளம்சைவப்புலவர் க.கைலவாசன் சொற்பொழிவாற்றவுள்ளர்.

ஆறுமுகநாவலர் ஆண்டில் இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும்முகமாக இந்து சமய அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது. (ஐ)



தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் தலைவாசல் இராஜகோபுர மகா கும்பாபிஷேகம் நேற்றுப் பெருந்திரளான மக்களின் பங்கேற்புடன் நடைபெற்றது.

ஈழநாடு
Eelanadu
24.03.2022 வியாழக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 10

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# தமிழ்த் தேசிய சர்வகட்சி மகாநாடு?

நாடு பாரதூரமான நெருக்கடிநிலையை நோக்கி சென்று கொண்டிருக்கின்றது. ஆரம்பத்தில் தங்களால் அனைத்தையும் சமாளிக்க முடியுமென்று கருதிய ராஜபக்ஷ அரசாங்கம், இப்போது கீழிறங்கி வந்திருக்கின்றது. தமிழ்த் தேசிய கட்சிகள் என்போர் வழமைபோல், தங்களின் தேர்தல் வெற்றிக்கான முதலீடுகளை செய்து கொண்டிருக்கின்றனர். சர்வகட்சி மாநாட்டை தமிழ்த் தேசிய கட்சிகள் பலவும் புறக்கணித்திருக்கின்றன. ஒன்றை புறக்கணிப்பது பெரிய விடயமல்ல – இதற்கு முன்னரும் பல புறக்கணிப்புக்களை தமிழ் மக்கள் கண்டிருக்கின்றனர். ஆனால், கேள்வி – புறக்கணித்த பின்னர் அடுத்தது என்ன? இதற்கு புறக்கணித்த கட்சிகளிடம் பதிலுண்டா?

ராஜபக்ஷக்களின் அரசாங்கம் நெருக்கடியில் இருக்கின்றது. ராஜபக்ஷக்கள் தொடர்பில் இதுவரையில் இருந்துவந்த சிங்கள அபிப்பிராயங்களில் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. இது மேலும் அதிகரிக்கலாம். இதன் விளைவு என்னவாகலாம்? அடுத்த தேர்தலில் ராஜபக்ஷக்கள் முன்னரைப்போல் வெற்றிபெற முடியாத நிலைமை ஏற்படும். தனிச் சிங்கள வீரஅரசியலின் கதை முடிவுக்கு வரும். ஆனால், இதனால் தமிழ் மக்களுக்கு என்ன கிடைக்கப் போகின்றது?

அரசாங்கத்தின் அழைப்பை நிராகரித்திருக்கும் கட்சிகளிடம் – இன்றைய நெருக்கடிநிலைமையை கையாள்வதற்கான பொது வேலைத்திட்டம் இருக்கின்றதா? தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் இரண்டு கட்சிகள் மகாநாட்டில் பங்குகொண்டிருக்கின்றன. ஒரு பங்காளிக் கட்சியான ரெலோ வெளியில் நிற்கின்றது. விக்னேஸ்வரன் வெளியில் நிற்கின்றார். கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் வெளியில் நிற்கின்றார். இந்தப் பின்னணியில் நோக்கினால் – இவர்கள் அனைவரும் ஒரு நேர்கோட்டில் பயணிக்க முடியும்? ஆனால், அது சாத்தியப்படுமா? ஏனெனில், ஒரு விடயத்தை நிராகரிக்கின்ற போது, தங்களுடைய அரசியல் நிலைப்பாட்டை முன்கொண்டு செல்வதற்கான தெளிவான வேலைத்திட்டம் இருக்க வேண்டும். அவ்வாறில்லாது விட்டால் இவ்வாறான நிராகரிப்புக்களால் எந்தவொரு பயனும் இல்லை.

தமிழ்த் தேசியம் பேசுகின்ற கட்சிகள் எவற்றிடமும் எந்தவோர் அரசியல் வேலைத்திட்டமும் இல்லை. அவர்களிடம் இருக்கின்ற ஒரேயொரு வேலைத்திட்டம் – அடுத்த தேர்தலில் தங்கள் கட்சி சார்பில் சிலரை எப்படியாவது வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்பது மட்டுமே! இந்தப் பாராளுமன்ற ஆசனங்களால் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை வென்றெடுக்க முடியுமென்றால், தமிழ் மக்களின் பிரச்னையென்று ஒன்று இப்போதிருந்திருக்காது.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒரு விடயம் தெளிவானது. அதாவது, மயிலே, மயிலே இறகு – போடென்றால் – அது நடக்காது. சிங்கள ஆட்சியாளர்களின் நிலைமைகளை சரியாகக் கணித்து, அதற்கேற்ப அரசியலை முன்னெடுக்கின்றபோது மட்டும்தான், ஓரளவு வாய்ப்புக்களை பெற முடியும். அந்த வாய்ப்புக்களையும் புத்திசாலித்தனமாக பயன்படுத்திக் கொண்டால் மட்டுமே, சில விடயங்களை அடைய முடியும். எனவே இப்போது, தமிழ் தேசிய கட்சிகள் செய்ய வேண்டியது, இன்றைய நிலைமையை எவ்வாறு கையாள்வதென்னும் நோக்கில், தங்களுக்கான சர்வகட்சி மாகாநாடு ஒன்றைப் பற்றி சிந்திப்பதாகும்.

தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுப்பதாகக் கூறிக் கொள்ளும் அனைத்து கட்சிகளும் – இன்றைய அரசியல் நெருக்கடி நிலைமையை எதிர்கொள்ளும் உபாயங்களை ஆராயும் நோக்கில் சர்வகட்சி மகாநாடு ஒன்றை கூட்ட வேண்டும். தமிழ்த் தேசியக் கட்சிகளாக செயல்படுவதற்கான வேலைத்திட்டம் தொடர்பில் ஆராய வேண்டும். ஏனெனில், எந்தவொரு நெருக்கடி நிலைமையும் நிரந்தரமானதல்ல. நெருக்கடிகள் மாறும் – எதிர்பாராத புதிய நெருக்கடிகள் வரும். அரசியலில் இது மாறி, மாறி நிகழும். ஆனால், இந்த நிலைமைகளை விளங்கிக் கொண்டு, தமிழர்கள் சுழியோடவில்லையாயின், எப்போதும் வெறுங்கையை பார்த்துக் கொண்டிருப்பவர்களாக மட்டுமே இருக்க நேரிடும்.

# முழு இலங்கையர்களுமே இந்தியா சென்றால்கூட ஆச்சரியமில்லை!

**அலசுவது இராஜதந்திரி**



*இந்தியா இலங்கைக்கு ஒரு பில்லியன் அமெரிக்க டாலர்களை கடனுதவியாக வழங்கியுள்ளதன் பின்னணியில் தற்போது இலங்கையைச் சேர்ந்த மூன்று குழந்தைகள் உட்பட ஆறு இலங்கையர்கள் இந்தியாவுக்கு அகதிகளாக சென்றடைந்துள்ளார்கள் என்று இந்திய கடலோர காவல் படை அறிவித்துள்ளது.*

*இந்தியாவுக்கு இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மக்கள் எண்பதுகளின் ஆரம்பத்திலிருந்து ஆயுதப் போராட்டத்தின் உக்கிரத்தன்மை காரணமாக ஆயிரக்கணக்கில் தமிழ்நாட்டின் கரையோரங் களை சென்றடைந்திருந்தனர். அவர்களை அன்று இந்திய மத்திய அரசாங்கமும், தமிழ் நாடு மாநில அரசாங்கமும் மிகுந்த அனுதாபத்தோடு தமிழகத்தில் ஏற்றுக்கொண்டிருந்தன.*

*இலங்கையில் யுத்தம் முடிவடைந்த பின்னர் இந்தியாவுக்கு அகதிகளாக சென்ற பலர் நாடு திரும்பியிருந்தனர்.*

*இருந்தபோதிலும் இன்றுங்கூட பலர் இலங்கை திரும்பாது இந்தியாவிலேயே அகதிகளாக இருந்து வருகின்றனர். அண்மையில், இந்தியாவில் இலங்கை அகதிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பொன்றில் தமிழகத்தில் 18,937 குடும்பங்களைச்சேர்ந்த 58,668 இலங்கை தமிழ் அகதிகள் தமிழக மாநில அரசாங்கத்தால் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்ட அகதி முகாம்களில் தங்கி வருகின்றனர்.*

*இதுதவிர 13,553 இலங்கை அகதிகள் குடும்பங்களைச் சேர்ந்த 34,123 பேர் அகதி முகாம்களுக்கு வெளியே வாழ்ந்து வருகின்றனர். இத்தகைய பின்னணியிலேயே தற்போது இன்று இலங்கையில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி காரணமாக தமிழ் நாட்டை நோக்கி அகதிகளாக சென்ற ஆறு பேர் இந்திய கரையோர பாதுகாப்பு படையினரால் காப்பாற்றப்பட்டு கரை சேர்க்கப்பட்டுள்ளனர்.*

*குழந்தைகள் உட்பட ஆறு இலங்கையர்கள் இந்திய கரையோர காவல் படையினரால் அரிச்சல்முனை என்ற இடத்திலுள்ள மணல்திட்டில் காப்பாற்றப்பட்ட அதே சமயம் ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்தியொன்று மேலும் பத்து பேர் இலங்கையிலிருந்து படகுகளில் தமிழகத்துக்கு வந்தனரெனவும் கரையோர காவல் படையினரால் காப்பாற்றப்பட்ட ஆறு பேர் தவிர ஏனைய பத்து பேர் இராமேஸ்வரம் தனுஷ்கோடியில் வேறு படகில் சென்று கரை சேர்ந்திருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.*

*இராமேஸ்வரம் மண்டபம் முகாம் பொலிஸார் தமிழகத்துக்கு அகதிகளாக வந்த நான்கு மாத குழந்தையொன்று உட்பட ஆறு பேர் மீது மேற்கொண்ட பூர்வாங்க விசாரணையின்போது அவர்கள் தமக்கு உணவு கிடைக்கவில்லை எனவும் தம்மை ஏற்றி வந்த படகோட்டிக்கு தமிழக தரையில் தம்மை கொண்டுவந்து சேர்ப்பதற்கு 50 ஆயிரம் ரூபாயைக் கட்டணமாக வழங்கியதாகவும் தெரிவித்திருந்தனர்.*


*அத்துடன், இந்திய கரையோர காவல் படையினரால் காப்பாற்றப்பட்ட ஆறு இலங்கையர்களும் தம்மைப்போல வேறு பலரும் இலங்கையில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி காரணமாக தமிழகத்துக்கு வருவதற்கு தயாராக இருக்கின்றனர் எனவும் தெரிவித்துள்ளனர்.*

*எனவே, இலங்கையில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி காணமாக இந்தியாவின் தமிழக மாநில கரையோரத்தை நேற்று முன்தினம் சென்றடைந்துள்ள ஆறு இலங்கையர்களின் சோகக்கதை, இலங்கையில் தற்போது நிலவுகின்ற மிக மோசமான பொருளாதார நிலபரத்தை வெளி உலகில் பிரதிபலிக்க வைத்திருக்கும் முதலாவது சம்பவமாக இருக்கின்றது.*

*இந்திய கரையோர காவல் படையினர் ஆறு இலங்கையர்கள் காப்பாற்றப்பட்டமை தொடர்பாக வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தமிழகத்தின் அரிச்சல் மணல் திட்டில் காப்பாற்றப்பட்ட ஆறு இலங்கையர்களும் இந்திய கரையோர காவல் படையின் பாவனையிலுள்ள அதிவேக ரோந்து படகான uoover Craft மூலமாகவே காப்பாற்றப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வடக்கே யாழ்ப்பாணப் பிரதேசத்திலிருந்தே இந்த ஆறு பேரும் தமிழகத்துக்கு வந்துள்ளனர் என்பதை இந்திய கரையோர காவல் படையினர் தெரிவித்துள்ளனர்.*

*அத்துடன், எதிர்வரும் நாட்களில் மேலும் பலர் வடக்கிலிருந்து மட்டுமல்ல. “பொருளாதார அகதிகளாக“ பாதிக்கப்பட்ட இலங்கையின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த பலர் இந்திய கரையோரங்களை சென்றடைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றே குறிப்பிட முடியும்.*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு




**மேடம்**
மற்றவர்களின் எளிய ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். வெளியூர், வெளிநாட்டுப் பயணங்கள் ஏற்பாடாகும். பிள்ளைகளுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும்.

**இடபம்**
முன்பைவிட செலவுகள் கட்டுக்குள் இருக்கும். வீடு கட்ட நீங்கள் எதிர்பார்த்த கடன் கிடைக்கும். புகழ் கூடும். கல்வி வகையில் செலவுகள் உண்டாகும்.

**மிதுனம்**
கணவன்- மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். நடக்காது என்று நினைத்த விஷயங்கள் இன்று கூடிவரும். இளைஞர்களுக்கு மகிழ்ச்சியான சூழல் உருவாகும்.

**கடகம்**
பாதியில் நின்ற வேலைகள் இன்று முடியும். வியாபார போட்டிகள் குறையும். மேலதிகாரி கனிவுடன் நடந்து கொள்வார். கவலை தீரும். பெற்றோரிடம் பணிவு தேவை. நண்பர்கள் உதவி செய்வர்.

**சிம்மம்**
நல்ல செயல்களை செய்து மகான்களின் அன்பை பெறுவீர்கள். தாயாரிடம் அன்பாக இருந்து அவரின் ஆசியைப் பெறுவீர்கள். அரசாங்க வகையில் நன்மை உண்டு. பிள்ளைகள் முன்னேறுவர்.

**கன்னி**
பிரச்னை தீரும். பலம், பலவீனத்தை உணர்வீர்கள். குடும்பத்தில் திருமணப் பேச்சுவார்த்தை வெற்றியடையும். வியாபாரிகளுக்கு லாபம் கிடைக்கும். நண்பர்கள் தேடி வருவார்கள்.

**துலாம்**
கலைத்துறையினருக்கு திறமையும் ஆர்வமும் வெளிப்படும். பணியில் கவனத்துடன் செயல்பட்டு இரட்டிப்பு லாபம் பெறுவீர்கள் . பணியிடத்தில் சில பொறுப்புகளை உங்களிடம் ஒப்படைப்பார்கள்.

**விருச்சிகம்**
இளைஞர்களின் முயற்சிகள் வெற்றி பெறும். பெரியவர்களுக்கு நன்மை செய்து அவரது ஆசியை பெறுவீர்கள். மனதை அரித்துக்கொண்டிருந்த கவலை மறையும்.

**தனுசு**
வார்த்தைகளை அளந்து பேசுங்கள். புது விஷயம் கற்பீர்கள். கோபத்தைக் குறைப்பது நல்லது. எதுவும் நிதானமாக நடக்கும். குழந்தைகளின் வெளிநாட்டுக் கனவு நனவாகும்.

**மகரம்**
உங்கள் வார்த்தைக்கு மதிப்புகூடும். நிதானமான நாள். அரசாங்க விஷயங்களில் அனுகூலம் உண்டு. வழக்கு மகிழ்ச்சியான தீர்ப்பை நோக்கிச் செல்லும்.

**கும்பம்**
மனதில் புதிய பலம் வருவதற்கான தன்னம்பிக்கை கூடும். அதிகார நிலையில் உள்ளோர் அறிமுகமாவர். கலகலப்பான நாள். சுப நிகழ்வுகளில் இருந்து வந்த தடை, தாமதங்கள் நீங்கும்.

**மீனம்**
முனைப்புடன் செயல்பட்டுச் சில வேலைகளை முடிப்பீர்கள். பிள்ளைகளின் அன்பு கிடைக்கும். உடல் சோர்வு நீங்கும்.பணியி டத்தில் உங்களின் பெருமையும், புகழும் பெருகும்.

# தமிழகத்திலுள்ள ஈழ தமிழருக்கு 80 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

புதுடில்லி, மார்ச் 24,

தமிழக முகாம்களில் வாழும் இலங்கை தமிழர்களின் நலனுக்காக 2021-22ஆம் நிதியாண்டில் 80 கோடி ரூபா (இந்திய ரூபாவில்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று இந்திய மத்திய அரசு நேற்று தெரிவித்துள்ளது.

இலங்கை உள்நாட்டு போரின் போது ஏராளமான தமிழர்கள், இந்தியாவில் தஞ்சம் அடைந்தனர். தமிழகம் முழுவதும் 108 முகாம்களில் இலங்கை தமிழர்கள் வசிக்கின்ற னர். அவர்களின் நல்வாழ்வுக் காக மத்திய, மாநில அரசுகள் சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழக முகாம்களில் வாழும் இலங்கை தமிழர்கள் தொடர்பாக மக்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு மத்திய இணையமைச்சர் அஜய் மிஸ்ரா எழுத்துபூர்வ மாக நேற்று பதில் அளித்தார். அதில் கூறியிருப்பதாவது:

தமிழக முகாம்களில் வாழும் இலங்கை தமிழர்களுக்காக நிதியுதவி, மானிய விலையில் அரிசி, இலவச உடைகள், பாத்திரங்கள், ஈமச்சடங்கு உதவி, அடிப்படை வசதிகளுக்காக மத்திய அரசு நிதி வழங்கி வருகிறது. 2021-22-ம் நிதியாண்டில் தமிழக முகாம்களில் வாழும் இலங்கை தமிழர்களுக்காக ரூ.80 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ.78 கோடி ஏற்கனவே தமிழக அரசுக்கு வழங் கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நளினிக்கு பிணை வழங்க முடியாது சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு

சென்னை, மார்ச் 24,

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை கைதியாக உள்ள நளினிக்கு பிணை வழங்க முடியாது என்று சென்னை உயர் நீதிமன்றம் கூறியுள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வரும் நளினி, தன்னை முன்கூட்டியே விடுதலை செய்ய கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். கடந்த முறை இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது, உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள பேரறிவாளன் வழக்கில் முடிவு எட்டப்பட்ட பின்னர் விசாரிக்கப்படும் என தலைமை நீதிபதி அமர்வு கூறியது.

வழக்கு நேற்றுமுன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்த போது, உச்சநீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் நளினி தரப்பு பிணை கோரியது. அதற்கு, எந்த மேல் முறையீட்டு வழக்கும் நிலுவையில் இல்லாத நிலையில் எந்த சட்டப்பிரிவின் கீழ் பிணை கோர முடியும் என தலைமை நீதிபதி கேள்வி எழுப்பினார். மேலும் உயர்நீதிமன்றத்தால் பிணை வழங்க முடியாது எனக் கூறிய தலைமை நீதிபதி, மனுதாரர் உச்சநீதிமன்றத்தை தான் அணுக முடியும் எனவும் தெரிவித்தனர்.

குற்ற விசாரணை முறைச்சட்டத்தின் படி, முன் பிணைகோரலாம், கைது செய்யப்பட்டால் பிணை கோரலாம், தண்டிக்கப்பட்டால் தண்டனையை நிறுத்தி வைத்து பிணை கோரலாம். ஆனால் மேல் முறையீட்டு வழக்கு ஏதும் இல்லாத நிலையில் எந்த அடிப்படையில் பிணை கோர முடியும் என்றார்.

உச்சநீதிமன்றம் அனைத்து நீதிமன்றங்களுக்கும் மேலானது எனவும், பின்னர், நளினி தரப்பு வழக்கறிஞரின் கோரிக்கையை ஏற்று மனு மீதான விசாரணையை மார்ச் 24ஆம் திகதிக்கு நீதிபதிகள் தள்ளிவைத்தனர்.

# ம.தி.மு.க. தலைமை கழகச் செயலாளராக துரை வையாபுரி போட்டியின்றி தேர்வு

சென்னை, மார்ச் 24,

மதிமுக தலைமைக் கழக செயலாளராக வைகோ மகன் துரை வையாபுரி நியமிக்கப்பட்டதற்கு அக்கட்சியின் பொதுக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.

ம.தி.மு.க.வின் பொதுக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்த பொதுக்குழுக் கூட்டத்தில் மதிமுகவின் அரசியல் நடவடிக்கைகள், நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட 24 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மதிமுகவின் தலைமைக் கழக செயலாளராக துரை வையாபுரி நியமனம் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனவே தலைமைக் கழக செயலாளர் மற்றும் இரண்டு மாநில துணை செயலாளர்கள், ஒரு தணிக்கைக்குழு உறுப்பினர்களுக்கான தேர்தல் நடைபெற்றது.

இதில் தலைமைக் கழக செயலாளர் பொறுப்புக்கும் யாரும் வேட்புமனு தாக்கல் செய்யவில்லை. இதையடுத்து துரை வையாபுரி போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார். துரை வையாபுரி தேர்வு குறித்து ம.தி.மு.க. பொதுக்குழுவில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

ஏற்கெனவே கடந்த ஒக்ரோபர் மாதம் தலைமைக் கழக செயலாளராக அறிவிக்கப்பட்ட துரை வையாபுரிக்கு அந்த பதவிக்கான ஒப்புதல் வழங்கி நேற்றைய பொதுக்குழுவில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

மேலும், கட்சியின் நடவடிக்கைகளுக்கு எதிராக பேசக்கூடிய நபர்கள், கட்சியின் நடவடிக்கைகளை விமர்சித்து பொதுவெளியில் பேசுபவர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்க ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவுக்கு முழு அதிகாரம் அளித்து பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

# ஆறுமுகசாமி ஆணையத்தில் ஓபிஎஸ் உண்மையைச் சொல்லியிருக்கிறார்

## சசிகலா

சென்னை, மார்ச் 24,

"ஆறுமுகசாமி ஆணையத்தின் விசாரணையில் அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர் செல்வம், என்னைப் பற்றி உண்மையை கூறியிருக்கிறார்" என்று சசிகலா கூறியுள்ளார்.

சென்னை தியாகராயநகரில் சசிகலா நேற்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியது: "ஓ.பன்னீர்செல்வம் உண்மையைச் சொல்லியிருக்கிறார். ஆறுமுகசாமி ஆணையம் ஆரம்பிக்கப்பட்ட போது கூட, இதில் உண்மை என்னவென்று தெரிய வேண்டும் பொதுமக்களுக்கும் தெரிய வேண்டிய விஷயம். எனவே ஆணையம் விசாரிப்பது நல்லது என்றுதான் நான் ஆரம்பித்ததில் இருந்து கூறிவந்தேன். அது இப்போது முடிவுக்கு வந்திருக்கிறது.

மக்கள் என்மீது சந்தேகித்ததாக நான் ஏற்றுக்கொள்ளவே இல்லை. அரசியலில் என்னைப் பிடிக்காமல் இருப்பவர்கள் கூட இந்த மாதிரி ஒரு சொல்லை ஆரம்பித்து வைத்திருக்கலாம், அப்படிதான் நான் நினைக்கிறேன்" என்று அவர் கூறினார்.

முன்னதாக, முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மரணத்தில் எந்த சந்தேகமும் இல்லை என்று விசாரணை ஆணையத்தில் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார். அதிமுக ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் முதல்வருமான ஓ.பன்னீர்செல்வம் ஆணையத்தில் ஆஜரானார். ஜெயலலிதாவுக்கு எதிராக சசிகலாவோ, அவரது குடும்பத்தினரோ சதித்திட்டம் எதுவும் தீட்டவில்லை. சசிகலா மீது தனிப்பட்ட முறையில் எனக்கு மரியாதை உண்டு என பன்னீர்செல்வம் கூறினார்.

## உம் கிருமை எனக்கு போதும்



இயேசு இறைவன், இறைமைந்தன் அவரிடம் கடவுளின் வல்லமை இருந்தது. இன்றைய நற்செய்தியும் அவருடைய வல்லமையை எடுத்துக் காட்டுகிறது. பேய்கள் இறைவனுக்கு மட்டுமே அடங்கி விடும். அவர் ஒருவரால் தான் பேய்களின் ஆதிக்கத்தை அடக்கி ஓட்ட முடியும்.

இயேசுவிடம் இறைவனின் சக்தியும், வல்லமையும் இருந்தன. இதைத் தான் "கடவுளின் ஆற்றல்" பேய்களை ஓட்டுவதற்காக குறிப்பிடுகிறார் இயேசு. இவ் வல்லமையே தூய ஆவியார். எனவே தான் "நான் கடவுளின் ஆவியைக் கொண்டே பேய்களை ஓட்டுகின்றேன். (மத் 12:28) என்று இதே நிகழ்ச்சியில் கூறுகின்றார். குறிப்பாக எம்மிடமுள்ள பழக்கப்பட்ட/ தொடர்ந்து நாம் விழும் பாவங்களைக் களைய, பாவ விடுதலைக்காக நாம் அன்றாடம் செபிக்க வேண்டும். இவ் வகை பேய் இறை வேண்டலினாலும் நோன்பினாலும் அன்றி வேறு எதனாலும் வெளியேறாது (மத் 9:29) என்கிறார் யேசு. நாமும் இத் தவக்காலத்தை பயனுள்ளதாக்கி எம்மிடமுள்ள பழக்கப்பட்ட பாவ விடுதலைக்காக செபிப்போம். நோன்பிருப்போம். இறைவனின் அருள் எமக்கு என்றும் உள்ளது என்று இறை நம்பிக்கையில் வாழ்வோம்

**அருட்பணி ம.ஜோண் பொஸ்கோ செ.தா.**

# மக்களை பட்டினியில் வாட ஒருபோதும் விடமாட்டோம்!

## சவால்களை எதிர்கொள்வோம் என்கிறார் அமைச்சர் ஜோன்ஸ்டன்



**கொழும்பு, மார்ச் 24**

**"நாட்டு மக்களை பட்டினியில் கிடக்க இடமளிக்கமாட்டோம். கடன் வாங்கியாவது, நெருக்கடி நிலைமையை சமாளிப்போம். தற்போதைய பிரச்னைகள் தற்காலிகமானவை. அவை விரை வில் தீர்க்கப்படும்" - என்று அமைச்சர் ஜோன்ஸ் டன் பெர்னான்டோ தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

நாட்டில் பஞ்சம் வரும் என எதிரணிகள் அறிவிப்புகளை விடுத்துவந்தன. அதற்கு நாம் இடமளிக்கவில்லை. மக்களுக்கு தேவையானவற்றை நெருக்கடிகளுக்கு மத்தியிலும் வழங்கி வருகின்றோம்.

டொலர் பிரச்னை, எரிவாயு பிரச்னை மற்றும் எரிபொருள் பிரச்னையெல்லாம் தற்காலிகமானவை. அவை தீர்க்கப்படும்.

கொரோனா பெருந்தொற்றிலிருந்து இந்த நாட்டு மக்களின் உயிர்களை ஜனாதிபதியே பாதுகாத்தார். எனவே, இந்த சவால்களையும் ஜனாதிபதி தலைமையில் வெற்றி கொள்வோம்.

நல்லாட்சியில் இடம்பெற்ற கொடூரங்கள் நாட்டு மக்களுக்கு தெரியும். தற்போது எதிரணிக்குள் ஜனாதிபதி வேட்பாளர் பதவிக்கு கடும் போட்டி ஏற்பட்டுள்ளது-என்றார்.

(அ)



# சிறந்த சேவையை வழங்குபவர்களாக கிராம அலுவலர் செயல்படவேண்டும்!

## கிளிநொச்சி மாவட்ட செயலர் தெரிவிப்பு

*கிளிநொச்சி, மார்ச் 24*

மக்களுக்கும் கிராம அலுவலர்களுக்குமான புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ளவும் மக்களிடையே நல்லுறவை பேணி சிறந்த சேவையை வழங்குபவர்களாக கிராம அலுவலர்கள் செயற்பட வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் முகாமைத்துவப் போட்டியில் வெற்றி பெற்ற கிராம அலுவலர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்களுக்கும் கிராம அலுவலர்களுக்குமான புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ளவும் மக்களிடையே நல்லுறவை பேணி அவர்களுக்கான சிறந்த சேவையை வழங்குவதோடு ஒரு நல்ல அபிப்பிராயத்தையும் தோற்றுவிப்பதாக கிராம அலுவலர்கள் செயற்பட வேண்டும். கிராம அலுவலர்கள், அதிகாரிகள் மக்களுடனான நல்லுறவை பேணிக்கொள்வது மிக அவசியமாகும். கிராம அலுவலர் அலுவலகங்கள் மக்களுக்கான சிறந்த சேவையை வழங்கும் மையங்களாக அமைய வேண்டும்.

அதாவது பொது நிர்வாக சேவைகளை மக்களுக்கு கொண்டு செல்லும் ஊடகமாக கிராம அலுலர்களே உள்ளனர். அரசாங்கத்தின் எந்த கொள்கையாக இருந்தாலும் சரி அதை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கும் நடைமுறைப் படுத்துவதற்கும் கிராம அலுவலர்கள் பொறுப்பு வாய்ந்தவர்களாக காணப்படுகின்றனர்- என்றார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் அரச முகாமைத்துவ போட்டிகளில் வெற்றியீட்டிய கிராம அலுவலர்களுக்கு அரச அதிபர் சான்றிதழ்கள் வழங்கி கௌரவித்தார்.

இந்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஸ்ரீமோகனன், மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) திருலிங்கநாதன் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

# 'ஜனாதிபதி பதவி விலகுவது தொடர்பில் கலந்துரையாடல் எதுவும் நடக்கவில்லை'

*கொழும்பு, மார்ச் 24*

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பதவி விலகுவது தொடர்பில் அமைச்சரவைக்கு எதையும் அறிவிக்கவில்லை. அவரின் பதவிக் காலம் பற்றியும் கலந்துரையாடல் இடம் பெறவில்லை என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரன தெரிவித்தார் .

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன்போது, ஜனாதிபதி பதவி விலகவேண்டும் என பல தரப்பினரும் கோரி வருகின்றனர். எனவே, ஜனாதிபதியின் பதவி காலம் பற்றி அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டதா அல்லது தான் பதவி விலகுவது தொடர்பில் ஜனாதிபதி அமைச்சரவைக்கு ஏதேனும் தெரியப்படுத்தினாரா என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ் வாறு கூறினார்.

அவ்வாறு எதுவும் கலந்துரையாடப்படவில்லை. அப்படியான கோரிக்கை விடுக்கப்பட்டு வருவது தொடர்பிலும் தனக்கு எதுவும் தெரியாது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

## மடுக்கரை காட்டுக்குள் துப்பாக்கி ஒன்று மீட்பு!

*மன்னார், மார்ச் 24*

மன்னார் தள்ளாடி இராணுவப் புலனாய்வுத் துறையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணியளவில் மடுக்கரை காட்டுப் பகுதியில் துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

எனினும் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

தள்ளாடி இராணுவப் புலனாய்வு துறையினர் மன்னார் பொலிஸாருடன் இணைந்து மடுக்கரை காட்டுப்பகுதியில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டது.

குறித்த துப்பாக்கி வேட்டைக்கு பயன்படுத்துவது என தெரிய வந்துள்ளது.

மேலதிக நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# 'அசிங்கமான அமெரிக்கர்'

## பஸிலை மீண்டும் விமர்சித்தார் விமல்



*கொழும்பு, மார்ச் 24*

"எம்.சி.சி. உடன்படிக்கையை செயற்படுத்திக் கொள்வதற்காகவே அமெரிக்க இராஜதந்திரிகள் இலங்கை வந்துள்ளனர். இதன் பின்னணியில் நிதி அமைச்சர் செயற்படுகின்றார்." - என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

தேசப்பற்றாளர்களால் உருவாக்கப்பட்ட இந்த ஆட்சியை 'அசிங்கமான' அமெரிக்கர் சீரழிக்கின்றனர் என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் நடைபெற்ற அரசியல் சந்திப்பொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:

நல்லாட்சியின்போது எம்.சி.சி. உடன்படிக்கையை செயற்படுத்துவதற்கு அமெரிக்கா முயற்சித்தது. அதற்கு நாம் இடமளிக்கவில்லை. இந்நிலையில் புதிய கோணத்தில் அந்த உடன்படிக்கையை செயற்படுத்தும் நோக்கிலேயே அமெரிக்க இராஜதந்திரிகள் இங்குவருகின்றனர்.

இலங்கை பொருளாதார ரீதியில் வங்குரோத்து அடைந்தால் திட்டத்தை இலகுவில் நிறைவேற்றிவிடலாம் என்பதால்தான், அதற்கான சூழ்நிலையை நிதி அமைச்சர் ஏற்படுத்திக்கொடுக்கின்றார் . தேசப்பற்றாளர்களால் உருவாக்கப்பட்ட இந்த ஆட்சியை 'அசிங்கமான' அமெரிக்கர் சீரழிக்கின்றனர்- என்றார் விமல். (அ)

# யாழ்.போதனா வைத்தியசாலை நடைபாதையில் தங்கி சிகிச்சை பெறும் கர்ப்பவதி தாய்மார்கள்!

*யாழ்ப்பாணம், மார்ச் 24*

யாழ்.போதனா வைத்திய சாலை மகப்பேற்று விடுதியில் 20 கர்ப்பவதித் தாய்மார்கள் படுக்கை வசதிகள் இன்றி நடைபாதையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விடுதிகளில் மகப்பேற்றுக்காக தங்கியிருப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், கர்ப்பவதிகள் பிற சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோருக்கு கட்டில் வசதிகள் இல்லை எனவும், இவர்கள் நடைபாதையில் பாயை விரித்து படுத்து சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் கூறப்பட்டது.

நடைபாதையிலும் போதியளவு இடவசதிகளின்றி மிகநெருக்கமாகவே அவர்கள் படுத்திருப்பதை அவதானிக்க முடிகிறது. (அ)

# ராஜபக்ஷ சகோதரர்களால் நான் ஓரங்கட்டப்பட்டேன்!

## வருந்துகின்றார் பீ.பி.ஜயசுந்தர



**கொழும்பு, மார்ச் 24**

**ராஜபக்ஷ சகோதரர்களுக்கு விசுவாசமாக செயல்பட்டபோதும் தான் ஓரங்கட்டப்பட்டுள்ளதாக, ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.**

தான் வாழ்நாளின் பெரும் பகுதியை ராஜபக்ஷர்களுக்காக உழைத்த போதிலும் ஒரு தொலைபேசி அழைப்பு கூட அவர்களிடமிருந்து வருவதில்லை என அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்றதும், உடனடியாக ஜனாதிபதியின் செயலாளர் பதவிக்கு பீ.பி.ஜயசுந்தர நியமிக்கப்பட்டார்.

சில காலம் நிதியமைச்சின் செயலாளராகவும் இருந்த அவர், ஏற்கனவே நாட்டில் சர்ச்சைக்குரிய நபராக இருந்தார். எனினும் 2 ஆண்டுகள் நிறைவடையும்போது பல பிரச்னைகளை ஏற்படுத்திக் கொண்டவர் இறுதியில் தனது பதவியை இராஜினாமா செய்து கொண்டார்.

ஜனவரி மாதம் அவர் ஓய்வு பெற்றார். ஊடகங்களில் அதிகம் பேசப்பட்ட ஜயசுந்தர, ஓய்வின் பின்னர் அனைவராலும் மறக்கப்பட்ட நபராக மாறியுள்ளார்.

இந்த நிலையில் அண்மையில் அரசாங்கத்தின் உயர் அதிகாரி ஒருவரை சந்தித்த அவர் சில தகவல்களை வெளியிட்டுள்ளார்.

"நான் எனது 40 வருட சேவை காலத்தில் பெரும்பகுதி ராஜபக்ஷர்களுக்காக உழைத்துள்ளேன். ஆனால் நான் ஓய்வு பெற்ற பின்னர் எவரும் என்னை கண்டுகொள்ளவில்லை. தொலைபேசி அழைப்பேற்படுத்தி எனக்கு நன்றி சொல்லவில்லை. ஒருவரும் என்னிடம் பேசவில்லை" என்று விரக்தியுடன் அவர் அந்த அதிகாரியிடம் கூறினார் என தகவல் வெளியாகியுள்ளது. (அ)

# கோட்டாபய அரசின் சர்வகட்சி மாநாடு பஸ் போன பிறகு கை காட்டும் வேலை!

## வேலுகுமார் எம். பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 24

"அரசின் சர்வகட்சி மாநாடு, பஸ் போன பிறகு கை காட்டும் வேலை ஆகும்." என கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதி தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்றைய அரசாங்கம், ஆரம்பம் முதல் இன்று வரை ஒரு தீர்மானத்தை கூட உரிய நேரத்தில் எடுக்கவில்லை. இன்று நாட்டின் பொருளாதாரம் சீரழிந்து நிற்கின்றது. முழு நாடும் கருப்பு சந்தையாக மாறி இருக்கின்றது. மொத்த பொருளாதாரமும் மீள கட்டியெழுப்ப முடியாத நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கின்றது. இந் நிலைமை ஏற்படாமல் இருப்பதற்கு அரசாங்கத்திடம் பல மாதங்களுக்கு முன்னரே பல வேண்டுகோள்கள் முன்வைக்கப்பட்டது. ஆனால் அரசு அதனை கண்டுகொள்ளவில்லை. செவிமடுக்கவில்லை. தான்தோன்றித்தனமாக நடந்துகொண்டது. இன்று சர்வகட்சி மாநாட்டை கூட்டுவது, பஸ் போன பிறகு கைக் காட்டும் வேலையாகும்.

நாட்டின் பொருளாதாரத்திற்கு செய்யக்கூடிய அனைத்து மோசமான நடவடிக்கைகளையும் செய்துவிட்டனர். கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு, 2000 பில்லியனுக்கு அதிகமான பணம் அச்சிட்டுவிட்டனர். அதுவே ரூபாவின் கொள்வனவு சக்தியை வீழ்த்தி விட்டது. அதுமட்டுமல்லாமல் அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதியை ரூபா 200 ஐ விட அதிகரிக்கவிடமாட்டோம் என்று அடம் பிடித்தனர். பொருளாதார நிலைமைகளை மீறி கட்டுப்படுத்தினர். அதன் மூலம் தங்களை சுற்றியுள்ளவர்களுக்கு லாபம் உழைக்க வழி சமைத்து கொடுத்தனர். இதனால், மேலும் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்தது. டொலர் பிரச்சினை மேலும் நெருக்கடிக்கு உள்ளானது. கடன் சுமையை மீள கட்டமைக்குமாறு கேட்டோம். அதனையும் செய்யவில்லை. இன்று அனைத்தையும் முடித்து விட்டு சர்வ கட்சி மாநாடு என்கிறார்கள். இதுவும் ராஜபக்ஷக்களின் வெறும் மூடி மறைப்பு நாடகமே ஆகும்- என்றார். (அ)

# தேநீரும் விலை உயர்வு

கொழும்பு, மார்ச் 24

ஏராளமான உணவகங்கள் சாதாரண தேநீரின் விலையை 60 ரூபாவாக உயர்த்தியுள்ளன.

சீனி மற்றும் எரிவாயு விலை உயர்வால் இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக உணவக உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் 30 ரூபாவுக்கு விற்பனையானமை குறிப்பிடத்தக்கது.

உணவுப் பொருட்களின் விலை உயர்வால் உணவகங்களுக்கு வரும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதாக உணவக உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் ஒரு கோப்பை பால் தேநீரின் விலை 100 ரூபாவாக அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நுகர்வோர் அதிகார சபையினால் குடாநாட்டில் 78 வழக்குகள் பதிவு

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ்.மாவட்ட நுகர்வோர் அதிகார சபை கடந்த மாதங்களில் திடீர் மேற்கொண்ட பரிசோதனையில் நேற்று முன்தினம் வரை 78 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் அறிவித்தார்.

ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த அறிக்கையிலேயே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

நிபந்தனை அடிப்படையில் பால்மா பொருட்கள் விற்பனை செய்தல், விற்பனை செய்ய மறுத்தல், விலையை மாற்றி விற்பனை செய்தல், காலாவதியான பொருட்களை விற்பனை செய்தல், விலையை வெளிக்காட்டாமை மற்றும் பொதி செய்யப்பட்ட பொருட்களின் மீது முறையான தரவுகள் வெளிக்காட்டாமை தொடர்பாகவே வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பொது மக்கள் துரித சேவை - 1977, யாழ். நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை - 0212229001 தொலைபேசி அழைப்பினூடாக எந்நேரமும் முறைப்பாட்டை மேற்கொள்ள முடியும்-என்றுள்ளது. (அ)

# ரயில் ஆசனங்கள் இனி ஒன்லைனில் முன்பதிவு

கொழும்பு, மார்ச் 24

இலங்கையில் முதன்முறையாக ரயில் ஆசனங்களை ஒன்லைன் மூலம் முன்பதிவு செய்வதற்கான இணையத்தளம் மற்றும் கையடக்கத் தொலைபேசி செயலி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம், எதிர்வரும் காலத்தில் உலகின் எந்தவொரு பகுதியிலிருந்தும் இலங்கையில் ரயில் ஆசனங்களை முன்பதிவு செய்ய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக, போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் ஆசனத்தை ஒதுக்கிக் கொள்ளக்கூடிய பயணம் மற்றும் ரயில் வகுப்பு ஆகியவற்றை தெரிவு செய்து ஒரு சில படிமுறைகள் மூலம் ஆசனங்களை முற்பதிவு செய்து கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இதற்கான கட்டணங்களை வீஸா, மாஸ்ரர் மற்றும் லங்கா கியூ.ஆர் உள்ளிட்ட பல்வேறு கொடுப்பனவு முறைகளின் மூலம் மேற்கொள்ளலாம் என்பதுடன், எம்-ரிக்கெற்றிங் (365) சேவை கொண்ட நிலையங்களுக்கு வந்து பயணச்சீட்டிலுள்ள இலக்கத்துடன் தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டை சமர்ப்பித்து குறித்த முன் பதிவு செய்யப்பட்ட நுழைவுச் சீட்டை பெற முடியும். (அ)



# இந்திய மீனவர்கள் 22 பேர் நிபந்தனையுடன் விடுதலை!

யாழ்ப்பாணம், மார்ச் 24

இலங்கை கடற்பரப்பில், அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது இலங்கை கடற்படையினரால் 2 கட்டங்களாக கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 22 பேருக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒன்றரை வருடச் சிறைத் தண்டனையுடன் ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பளித்துள்ளது.

13 மீனவர்கள் ஒரு படகில் 09 மீனவர்கள் மற்றோரு படகில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது கைது செய்யப்பட்டனர். அவர்களுள் 13 பேரடங்கிய படகு உடனடியாகவே அரசுடைமையாக்கப்படுவதாக நீதிபதி அறிவித்தார். படகின் உரிமையாளரும் படகில் இருந்தமையால் குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

09 பேர் பயணித்த படகு தொடர்பான வழக்கு விசாரணை ஜூன் மாதம் 24 திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எல்லை தாண்டி மீன்பிடித்தமை, தடை செய்யப்பட்ட உபகரணங்களை பயன்படுத்தி மீன்பிடித்தமை, கைதாகும் வரை மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் தலா ஆறு மாதங்கள் சிறைத்தண்டனை என்ற அடிப்படையில் அவர்களுக்கு ஒன்றரை வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை தீர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# தியாகதீபம் திலீபனின் இறுதி வார்த்தைகளை சபையில் பகிர்ந்து கொண்டார் விஜித ஹேரத்!



கொழும்பு, மார்ச் 24

உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு உயிரிழந்த திலீபன் என்று அழைக்கப்படும் இராசையா பார்த்தீபன் கூறிய வார்த்தைகளை தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் பாராளுமன்றில் நேற்று முன்தினம் நினைவு கூர்ந்தார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து 1987 செப்ரெம்பர் 26 ஆம் திகதி முதல் 10 நாட்கள் உண்ணாவிரதப் போராட்டத்தின் பின்னர் அவர் உயிரிழந்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் வடக்கில் உள்ளவர்களை மட்டுமல்ல, தெற்கிலும் உள்ளவர்களையும் ஒடுக்கும் என்று திலீபன் அன்று கூறியது தற்போதும் நினைவிருக்கிறது என பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் குறிப் பிட்டார்.

மேலும் இந்தச் சட்டம் இறுதியில் தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் சிங்களவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் என்பதை அவரது தியாகம் தங்களிடம் கூறியது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பயங்கரவாதத் தடை தற்காலிக ஏற்பாடுகள் திருத்த சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு நேற்று முன்தினம் திருத்தங்களுடன் நிறைவேறியது. (அ)

# இனிமேல் மக்கள் வரிசையில் காத்திருக்கத் தேவையில்லை!

## அடுத்த வாரம் தீர்வு என்கிறார் பஸில்

**கொழும்பு, மார்ச் 24**

**நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள், எரிவாயு மற்றும் மின்சார நெருக்கடியானது அடுத்த வாரத்துக்குள் முடிவுக்கு கொண்டுவரப்படும் என நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.**



எரிபொருளை இறக்குமதி செய்வதற்காக இந்தியாவிடம் இருந்து 500 மில்லியன் டொலர் கடனாக பெற்றுள்ளதாகவும், அந்தப் பணத்தில் எரிபொருளை இறக்குமதி செய்ய ஆரம்பித்துள்ளதாகவும் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அவர் கூறினார்.

மேலும் அத்தியாவசியப் பொருட்கள், மருந்துகள், தொழில்துறை மூலப்பொருள்களை கொள்வனவு செய்வதற்காக மேலும் 1500 மில்லியன் டொலர் கடன் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், இதனூடாக தற்போது பொருட்களை இறக்குமதி செய்யும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# மீண்டும் அதிகரிக்கின்றது இந்திய மீனவர் அத்துமீறல்

## துணைத் தூதுவருடன் பேச்சு

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத்தூதர் ராகேஸ் நடராஜ் ஜெயபாஸ்கரனைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தில் நேற்று முன் தினம் செவ்வாய்க் கிழமை இந்த சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

இந்த கலந்துரையாடலின் போது இலங்கை எல்லைக்குள் இந்திய இழுவைமடிப் படகுகளின் வருகை மீளவும் அதிகரித்துள்ளதாகவும், குறிப்பாக எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு ஆகிய தீவகப் பகுதிகளில் இந்தியப் படகுகள் இலங்கை எல்லைக்குள் வருவதாகவும் அதனை கட்டுப் படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த சந்திப்புக்கு பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளன தலைவர் அன்னராசா,

தீவகப் பகுதிகளில் எல்லை தாண்டிய இந்திய இழுவைப் படகுகளின் வருகை கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் அதிகரித்துள்ள நிலையில் அதனை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு இந்திய துணைத்தூதரிடம் கோரியதாக தெரிவித்தார். (அ)

# ஓ.எல். பரீட்சார்த்திகளுக்கு அடையாள உறுதிக் கடிதம்

கொழும்பு, மார்ச் 24

கல்வி பொது தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவுள்ள பாடசாலை பரீட்சார்த்திகளுக்கு தேசிய அடையாள அட்டைக்கு பதிலாக அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்குரிய கடிதமொன்று விநியோகிக்கப்படவுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

தேசிய அடையாள அட்டைக்கு பயன்படுத்தப்படும் அட்டையை சிக்கனப்படுத்தும் நோக்குடன், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக்க தெரிவித்தார்.

கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப்பத்திரம், வங்கிக் கணக்குகளை ஆரம்பித்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கும் இந்த கடிதம் செல்லுபடியாகும் என அவர் கூறினார்.

அடையாளத்தை உறுதிப் படுத்தும் கடிதம் விநியோகிக் கப்பட்டு மூன்று மாதங்களின் பின்னர் தேசிய அடையாள அட்டை விநியோகிக்கப்படும் என்றும் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார். (அ)

# நிதி அமைச்சரை நீக்குவது தொடர்பில் ஆளும்கட்சிக் கூட்டத்தில் பேசவில்லை

கொழும்பு, மார்ச் 24

நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவை பதவியில் இருந்து நீக்குவது குறித்து எவ்வித கலந்துரையாடலும் இடம்பெறவில்லை என இராஜாங்க அமைச்சர் டி.பி. ஹேரத் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் ஆளும் தரப்பின் விசேட கூட்டம் இடம் பெற்றது.

நிதி அமைச்சரை பதவியில் இருந்து நீக்குவது குறித்து இதன்போது கலந்துரையாடப்படவில்லை என்றும் மாறாக அவரது நடவடிக்கைகள் பாராட்டப்பட்டன என்றும் டி.பி. ஹேரத் தெரிவித்தார்.

பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு தீர்வு காண அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்ற முடிவு ஏற்றுக்கொள்ளப்பட்டது என ஷெஹான் சேமசிங்க குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்த சந்திப்பில் எந்தவித சூடான விவாதமும் இடம்பெறவில்லை என்றும் நிலவும் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதில் கவனம் செலுத்தப்பட்டதாகவும் இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க கூறினார். (அ)

# ஜி.எஸ்.பி வரிச்சலுகை தொடர்பில் மீளாய்வு!

கொழும்பு, மார்ச் 24

இலங்கைக்கு ஜி.எஸ்.பி பிளஸ் சலுகையை நீடிப்பதா? இல்லையா? என்பது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் விரைவில் தீர்மானிக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் உள்ளிட்ட காரணங்களால், ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை வழங்கவேண்டாம் என்று வலியுறுத்தும் பிரேரணை ஒன்று கடந்த ஆண்டு ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இந்த பிரேரணையில் இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கவேண்டும் உள்ளிட்ட பல நிபந்தனைகள் தெரிவிக்கப் பட்டிருந்தன.

இதற்கிடையில் ஏற்கனவே ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் அடிப்படையில், இலங்கைக்கு ஜி.எஸ்.பி பிளஸ் சலுகையை நீடிப்பதா? இல்லையா? என்பது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் விரைவில் தீர்மானிக்கும் என்று தகவல் வெளியாகியுள்ளது. (அ)

# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து யாழ்.நகரில் நேற்று கவனவீர்ப்பு பேரணி

யாழ்ப்பாணம், மார்ச் 24

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.நகரில் நேற்று கவனவீர்ப்பு பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.



யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் நேற்று புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஆரம்பித்த இந்த பேரணி வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் முடிவடைந்தது.

அரசியல் கைதிகளை விடுதலை செய், காணாமலாக்கப் பட்டோருக்கு நீதி வேண்டும், காணிகளை விடுவியுங்கள், இந்திய இழுவைமடி படகுகளை தடுத்து நிறுத்து போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் இடம் பெற்றது. (அ-03)

# வானொலியால் பறிபோன உயிர்

கொழும்பு, மார்ச் 24

அடமானம் வைக்கப்பட்ட வானொலியை மீட்க வந்த போது ஏற்பட்ட தகராறு காரணமாக நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் பிற்பகல் கிராண்ட்பாஸ், வெஹர கொடெல்ல சந்திக்கு அருகில் இந்தக் கொலை இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் இறந்தவருக்கு வானொலியை அடகு வைத்துள்ளார்.

அடமானம் வைக்கப்பட்ட வானொலியை மீட்க வந்த போது ஏற்பட்ட தகராறு காரணமாக கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் வெல்லம்பிட்டிய வெஹரகொடெல்ல பிரதேசத்தில் வசிக்கும் 51 வயது டையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை கிராண்ட்பாஸ் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.(அ)

# எரிபொருள் வரிசை தொடரும் என்பதை இராணுவ பாதுகாப்பு புலப்படுத்துகிறது!

## தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 24

எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு இராணுவத்தினரை அனுப்ப அரசாங்கம் எடுத்த முடிவு அடுத்த சில நாட்களுக்கு எரிபொருள் வரிசைகள் தொடரும் என்பதை நிரூபிப்பதாக தொழிற்சங்கங்கள் கூறுகின்றன.

எரிபொருள் வரிசைகள் எதிர்காலத்தில் மோசமடைந்து மோதல்களுக்கு வழிவகுக்கும் என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொண்டதை இது நிரூபிப்பதாக தொழிற்சங்கவாதியான ஆனந்த பாலித கூறினார்.

இந்தியாவிடமிருந்து பெறப்பட்ட கடனுடன் போதுமான எரிபொருள் இருப்புக்கள் வருவதால் எரிபொருள் நெருக்கடி தீர்க்கப்படும் என்று கூறப்பட்டாலும் எரிபொருள் நெருக்கடி இன்னும் நிலவி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

நாள் முழுவதும் எரிபொருள் விநியோகிக்கப்படாவிட்டால் வரிசைகள் மோசமடையக் கூடும் என்றும் அது மோதல்கள் மற்றும் உயிரிழப்புகளுக்கு வழிவகுக்கும் என்றும் அவர் எச்சரித்தபோதிலும் அரசாங்கம் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு பாதுகாப்பை வழங்கத் தவறியதாக ஆனந்த பாலித கூறினார்.

எரிபொருள் வரிசைகளில் நான்கு பேர் இறந்ததாகவும், ஒருவர் கொல்லப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எரிபொருளை இறக்குமதி செய்வதற்கும் விநியோகிப்பதற்கும் அரசாங்கம் முன்னுரிமை அளிக்கவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (அ)

# தங்கத்தில் கண் வைக்கும் அரசியல்?

■ நா.யோகேந்திரநாதன்

இலங்கையில் இடதுசாரி அரசியல் வரலாற்றில் அமரர் கார்த்திகேயன் மாஸ்ரர் அவர்களை அறியாதவர்கள் இருக்கமுடியாது. அவர் ஒரு தலைசிறந்த ஆங்கில ஆசிரியர் மட்டுமின்றி அவர் இடையிடையே கூறும் நகைச்சுவைத் துணுக்குகள் சிரிக்க வைப்பது மட்டுமின்றி சிந்திக்கவும் வைக்குமளவுக்கு ஆழமானவை.

அத்தகைய நகைச்சுவைத் துணுக்குகளில் ஒன்றைத் தற்சமயம் நினைவுபடுத்த வேண்டியுள்ளது. அதாவது "இந்தியாவில் கோவில்களிலுள்ள தங்கத்தைக் கொள்ளையடிக்க கஜினி முகமது 14 தடவைகள் படையெடுத்தும் அதில் அவனால் வெற்றிபெறமுடியவில்லை. ஆனால் ஜவகர்லால் நேரு ஒரேயொரு போருடன் இந்தியக் கோவில்களின் தங்கத்தைக் கைப்பற்றி விட்டார். கோவில் ஆதீனங்களும் மடாலயங்களும் தாங்களாகவே கொண்டு போய்க் கொடுத்துவிட்டனர். 1962 இடம்பெற்ற சீன இந்திய எல்லைப் போர்" என்பது தான் அது.

அதாவது ஆட்சியாளர்கள் தேசத்தின் பேராலும் தேசத்தின் பாதுகாப்பு என்ற பேரிலும் மக்களிடமிருந்து வரிகள் மட்டுமின்றி அன்பளிப்பாகவும் தேசபக்தியின் பெயராலும் விதம்விதமான கொள்ளைகளையும் நடத்தி வருகின்றனர்.

அவ்வகையில் இலங்கையில் அண்மையில் பதவி பெற்ற இராஜாங்க அமைச்சர் ஒருவர் உரையாற்றும்போது, தென்கொரியா பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தத்தளித்துக் கொண்டிருந்தபோது மக்கள் தாங்கள் தாங்களாகவே நகைகளைக் கொண்டு சென்ற கொடுத்து நாட்டைக் காப்பாற்றினர் எனக் கூறியிருந்தார்.

அடுத்து உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தாங்கள் அதற்காக மக்களிடம் தங்கத்தைக் கேட்கவில்லையெனவும் அந்தக் கொரிய மக்களின் நாட்டுப் பற்றை விளங்கப் படுத்தவே அது பற்றிக் கூறியதாகவும் தெரிவித்திருந்தார்.

ஆனால் இலங்கையில் அரிசியில், கோதுமை மாவில், பால்மாவில், எரிபொருளில், சமையல் எரிவாயுவில் என எல்லாவற்றிலுமே கைவைத்துவிட்ட அரசாங்கம் தங்கத்தில் மட்டும் கை வைக்காது என எப்படிச் சொல்லிவிட முடியும்? ஏற்கனவே ஒரு பவுண் தங்கத்தின் விலை ஒன்றரை இலட்சத்துக்கு மேலாக ஏறிவிட்டது குறிப்பிடத்தக்கது.

ஆனால் நாடு மீளமுடியாத நெருக்கடிகளைச் சந்திக்கும் காலங்களில் மக்கள் அதிலிருந்து மீள அர்ப்பணிப்புடன் உழைப்பது அப்படியொன்றும் அதிசயமுமல்ல, உலகில் எங்கும் நடைபெறாமலும் இல்லை.

தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாகப் பரிமாணம் பெற்ற நாட்களில் விடுதலைப் புலிகள் மக்களிடம் வீட்டுக்கு 2 பவுண் கோரினர் சிலரிடம் வலிந்தே பெறவேண்டியிருந்த போதிலும் பெரும்பாலோனோர் தாமாக விரும்பியே கொடுத்தனர். ஒரு தொகுதி மக்கள் தங்கள் விடுதலையை நேசித்த போது அதற்காக எதையும் அர்ப்பணிக்கத் தயங்கமாட்டார்கள் என்பதற்கு இதுவொரு நல்ல உதாரணமாகும்.

தங்களது உயிர்த் தியாகங்கள் நிதி, வழங்கல் உள்ளிட்ட அர்ப்பணிப்புகள் தங்கள் தேசத்தின் நலன்களுக்கோ அல்லது இன விடுதலைக்காகவோ பயன்படுமென மக்கள் கருதும்போது அவர்கள் எவ்விதமான இழப்புகளுக்கு முகம்



கொடுக்கத் தயங்குவதுமில்லை.

இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது சோவியத் யூனியன் ஆண்களில் பெரும்பாலானோர் ஜேர்மன் ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போரிட களமுனைக்கு வந்து விட்டனர். உற்பத்திப் பணிகளில் பெண்களே முழுமையாக இறங்கி நாட்டினதும் களமுனையினதும் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்தனர். நாட்டுக்கு ஆண்கள், பெண்கள், முதியவர்கள், சிறுவர்கள் என்ற பேதமின்றி வழங்கிய அர்ப்பணிப்புகளாலேயே ஜெர்மனியைத் தோற்கடித்து இளம் சோவியத் நாட்டைக் காப்பாற்ற முடிந்தது.

அதேபோன்று 1960ஆம் ஆண்டு காலப்பகுதியில் சோவியத் ஒன்றியத்துக்கும் சீனாவுக்குமிடையே ஏற்பட்ட கருத்து மோதல் காரணமாக சோவியத் நாடு தனது சீனாவுக்கான சகல உதவிகளையும் நிறுத்தியது. அந்த நேரத்தில் சீனத் தலைவர் மாஓசேதுங் சீன மக்களிடம் "யாங்ஷி நதியின் சீற்றத்தைக் கட்டுப்படுத்தி உற்பத்தியைப் பெருக்க சீன தேசத்தை மின்சாரமயப்படுத்துவோம்" என்ற அறைகூவல் விடுத்தார்". அவரின் அறைகூவலை ஏற்ற சீன மக்களில் 5 இலட்சம் பேர் இரு வருடங்கள் தொடர்ச்சியாக உணவையும், உடையையும் மட்டுமே பெற்றுப் பணியாற்றினர். யாங்ஷி நதிக்குக் குறுக்காகப் பிரமாண்டமான அணை கட்டப்பட்டது. அதனால் யாங்ஷி ஆறு திசை திருப்பப்பட்டு உற்பத்தி பெருக்கப்பட்டது. சீனாவின் பெரும் பகுதி மின்சார மயப்படுத்தப்பட்டது.



வறுமையிலும் பட்டினிச் சாவிலும் அவஸ்தைப்பட்ட சீனா இன்று உலகின் முக்கிய பொருளாதார, அரசியல், இராணுவ வல்லரசாக எழுச்சி பெற்று நிற்கிறது.

விடுதலைப் புலிகளின் போரில் மக்களின் பங்களிப்பு, சீனா சோவியத் நாடு ஆகிய நாடுகளின் மக்கள் தன்னலம் கருதாது வழங்கிய உழைப்பு என அனைத்து மக்களின் அர்ப்பணிப்புகளும் முழுத் தேசத்தின் நலன்களுக்கே பயன்படும் என மக்கள் கருதியபோது அவர்கள் தயங்காமல் களமிறங்கினர்.

இலங்கையிலும் அப்படியொரு நிலைமை ஏற்படுமானால் தங்கமென்ன இருப்பவற்றையெல்லாம் அள்ளிக் கொடுத்து நாட்டை நெருக்கடியிலிருந்து காக்கத் தயங்கப் போவதில்லை.

ஆனால் இன்றைய

> **உலக மகா யுத்தத்தின்போது சோவியத் யூனியன் ஆண்களில் பெரும்பாலானோர் ஜேர்மன் ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போரிட களமுனைக்கு வந்து விட்டனர். உற்பத்திப் பணிகளில் பெண்களே முழுமையாக இறங்கி நாட்டினதும் களமுனையினதும் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்தனர்.**

ஆட்சியாளர்கள் மீதும் மக்களுக்கு அரச இயந்திரத்தின் மீதும் நம்பிக்கை ஏற்படக்கூடிய சாத்தி யக் கூறுகள் இருப்பதாகத் தெரிய வில்லை.

2015இற்கு முற்பட்ட காலத்தில் ஆட்சியிலிருந்தவர்களே இப்போ தும் அரச அதிகாரத்தில் உள்ள னர்.

தற்போது ஜனாதிபதியாயி ருக்கும் கோத்தபாய ராஜபக்ஷ் அரசாங்கத்துக்கு வரவேண் டிய 110 கோடிகளை தனியார் நிறுவனம் கொள்ளையடிக்க உதவி செய் தார் எனக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷ் தேர்தல் காலத்தில் பஞ்சாங்கம் அடித்து விநியோ கித்து அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தார் எனவும் குற்றம் சாட்டப்பட்டது. இப்படிப் பல அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், நிர்வாக அதிகாரிகள் ஆகியோர் மீது வழக்குகள் போடப்பட்டிருந்தன. இப்படியான சகல வழக்குகளும் சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் தள்ளுபடி செய்யப்பட்டன. அதுமட்டுமின்றி நீதிமன்றங்களால் தண்டிக்கப்பட்ட பலர் ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டனர்.

இப்படி ஒரு சிலரின் நலன்களைப் பாதுகாக்க நீதி, நியாயம் என அனைத்தும் புறக்கணிக்கப்பட்டு ஊழல், மோசடி, அதிகார துஷ்பிரயோகம் என்பன இயல்பானவையாக மாறிவிட்ட நிலையில் மக்கள் நாட்டுக்காகத் தங்களை அர்ப்பணிக்கத் தயாராவார்களா?

அதை விளங்கித்தான் போலும் ஜீ.எல்.பீரிஸ் தாங்கள் மக்களிடம் தங்கம் கேட்கப் போவதில்லையெனக் கூறியுள்ளார்.

நாட்டுக்காக எதையும் அர்ப்பணிக்கத் தயாரான மக்கள் தனி நபர்களின் மோசடிகளுக்கு பலி போக தியாகம் செய்வார்கள் என எதிர்பார்க்கமுடியுமா?

**அருவி**

# ம.தி.மு.கவிலும் வாரிசு அரசியல்தானா? போர்க்கொடி தூக்கும் செயலாளர்கள்!

■ பிரபுராவ் ஆனந்தன்

வைகோ மற்றும் அவரது மகன் துரை வைகோவுக்கு எதிராக 4 மாவட்ட செயலாளர்கள் போர்க்கொடி தூக்கி இருப்பது மதிமுகவினர் இடையே சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

ம.தி.மு.க துணைப் பொதுச் செயலாளர்கள், தலைமை கழக செயலாளர் உள்ளிட்ட 4 பதவிகளுக்கு தேர்தல் நடத்தப்பட உள்ளது. இதற்கான வேட்பு மனுத் தாக்கல் திங்கள்கிழமை தொடங்கியது. ஏற்கனவே தலைமை கழக செயலாளர் பதவிக்கு வைகோவின் மகன் துரை வைகோ அறிவிக்கப்பட்டு உள்ளார். இது மதிமுகவின் மூத்த நிர்வாகிகள் இடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

சிவகங்கை மாவட்ட செயலாளர் செவந்தியப்பன் மற்றும் சில மாவட்ட செயலாளர்கள், உயர்நிலைக்குழு உறுப்பினர், வழக்கறிஞர் அணி செயலாளர், உள்ளிட்டோர் துரை வைகோ கட்சிப் பணிக்கு கொண்டு வந்ததை ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்நிலையில் சிவகங்கையில் அமைந்துள்ள மதிமுக மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் சிவகங்கை மாவட்ட செயலாளர் செவந்தியப்பன் தலைமையில் மாவட்ட செயலாளர்கள் வைகோவின் முடிவுக்கு எதிராக தனியாக ஆலோசனை கூட்டம் நடத்தினர்.

இதில் சிவகங்கை மாவட்ட செயலாளர் செவந்தியப்பன், திருவள்ளூர் மாவட்ட செயலாளர் செங்குட்டுவன், விருதுநகர் மாவட்ட செயலாளர் சண்முக சுந்தரம், உயர்நிலைக்குழு உறுப்பினர் அழகுசுந்தரம், வழக்கறிஞர் அணி செயலாளர் பாரத மணி உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் உட்கட்சி தேர்தல், கட்சி விதிகளின்படி நடத்தப்படவில்லை, கட்சியில் ஜனநாயகம் இல்லை சர்வாதிகாரம் மட்டுமே உள்ளது, வாரிசு அரசியலை எதிர்த்து கட்சி தொடங்கி விட்டு அதே வாரிசு அரசியலை நாமும் வரவேற்பதா?, மறைமுக பேரம் பேசி ம.தி.மு. கவை, திமுகவுடன் இணைக்க முயற்சி நடந்து வருகிறது என்றெல்லாம் அவர்கள் குற்றம்சாட்டினர்.

இதனிடையே ம.தி.மு.கவை பிளவு படுத்த முயற்சிப்பதாக கூறி முன்னாள் தேர்தல் பணிக்குழு செயலாளர் பாலுச்சாமி, மாவட்ட துணைசெயலாளர், நகரச் செயலாளர் உள்ளிட்ட மதிமுக நிர்வாகிகள் அதிருப்தி குழுவினரை அலுவலகத்தில் இருந்து வெளியேற்ற கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து தகவலறிந்து வந்த காவல்துறையினர் போராட்டத்தில் ஈடுபட்ட மதிமுகவினரிடம், கட்சியில் இருந்து நீக்கப்படாதவர்களை அலுவலகத்தில் இருந்து வெளியேற்ற முடியாது என கூறியதால் எதிர்ப்பு கோஷமிட்டு கலைந்து சென்றனர்.

**மதிமுகவில் ஜனநாயகம் இல்லை**

இது குறித்து பிபிசி தமிழிடம் சிவகங்கை மாவட்ட செயலாளர் செவந்தியப்பன் விரிவாக பேசினார், நான் கடந்த 28 ஆண்டுகளாக, எனது வாழ்க்கை முழுவதும் அர்ப்பணித்தேன். ம.தி.மு.கவில் உண்மையாக பணியாற்றி வந்தேன்.

கட்சி இட்ட கட்டளைகளை செவ்வனே நிறைவேற்றி வந்துள்ளேன். மக்கள் நலன் சார்ந்த பல்வேறு பிரச்சினைகளை தீர்க்க அறப் போராட்டங்கள் மூலமாகவும், சட்டப் போராட்டங்கள் மூலமாகவும் தொடர்ந்து போராடி வந்தேன். பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 19 மாதங்கள் சிறையில் இருந்துள்ளேன். இத்தனை ஆண்டு காலம் கட்சிக்காக உழைத்தவர்களுக்கு மதிமுக மதிப்புக் கொடுக்கவில்லை. மதிமுக கட்சியில் ஜனநாயகம் இல்லை.

கடந்த 2 ஆண்டு காலமாக கட்சி விதிகளை மீறி சர்வாதிகார போக்கில் கட்சி நடத்தப்பட்டு வருகிறது. கலிங்கப்பட்டியில் கடந்தாண்டு ஒக்ரோபர் 20ஆம் திகதி மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் வைகோ அவரது மகன் துரை வைகோவை மதிமுக தலைமைக் கழகச் செயலாளராக தேர்வு செய்ய முடிவு செய்தார்.

எந்தவிதமான முன்னறிவிப்பும் இன்றி அவசரமாக கூட்டம் நடத்தி துரை வைகோவை மதிமுக தலைமைக் கழகச் செயலாளராக தேர்வு செய்ததால் 8க்கும் மேற்பட்ட மாவட்ட செயலாளர்கள், உயர்மட்ட குழு உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்து கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்தாக செவந்தியப்பன் தெரிவித்தார்.

**துரை வைகோ வின் பிடியில் மதிமுக என குற்றச்சாட்டு**

தொடர்ந்து பேசிய செவந்தியப்பன், வைகோ எங்களை தொடர்பு கொண்டு இவ்வாறு தவறுகள் மீண்டும் நடைபெறாமல் நான் பார்த்துக்கொள்கிறேன். அடுத்த மாவட்ட செயலாளர் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டு சமரச படுத்தினார். மீண்டும் நாங்கள் தலைவர் வைகோவை தொடர்பு கொண்டபோது எங்களால் அவரை தொடர்பு கொள்ள முடியவில்லை. அதற்கு முழு காரணம் துரை வைகோ தான்.

மாவட்ட செயலாளர் கூட்டத்தில் கலந்து கொள்ளாத நபர்களை உடனடியாக கட்சியை விட்டு நீக்குங்கள் என துரை வைகோ கொடுத்த அழுத்தத்தின் அடிப்படையில் எங்களுடன் பேச மறுத்துவிட்டார். உடனடியாக உயர்மட்ட குழுவை கூட்ட வேண்டும் என வைகோவுக்கு கடிதம் அனுப்பி இருந்தேன். கடிதத்திற்கு பதில் எதுவும் இதுவரை எனக்கு கிடைக்கவில்லை.

கட்சி தேர்தலில் வாக்களிக்க தகுதியான வாக்காளர் மற்றும் வேட்பாளர்கள் பட்டியல் வேண்டும் என நான் கேட்டதற்கு இதுவரை கொடுக்கவில்லை. இது தான் சர்வாதிகாரம்.

இத்தனை ஆண்டுகள் நான் கட்சிக்காக கடும் பணியாற்றி உள்ளேன், என அனைத்தையும் சுட்டிக்காட்டி வரும் கட்சி தேர்தலில் நான் துணைப் பொதுச் செயலாளர் பதவிக்கு போட்டியிட வேண்டும் என கேட்டதற்கு இதுவரை எந்தவிதமான அறிவிப்பும் கட்சி தலைமையிடம் இருந்து வரவில்லை என்றார் செவந்தியப்பன்.

**வாரிசு அரசியலுக்கு எதிரானவர் வைகோ**

தொடர்ந்து பேசிய செவந்தியப்பன், ஈழ பிரச்சினையை மையப்படுத்தி மட்டுமே வைகோவின் பின்னால் சென்றோம். ஆனால் எங்கள் அனைவரையும் சேர்த்துக்கொண்டு கலைஞரின் குடும்ப அரசியலுக்கு எதிராக விமர்சனம் செய்து அரசியல் செய்தார். ஆனால் இன்று அவருடைய மகனை சத்தமில்லாமல் கட்சியின் முக்கிய பொறுப்புக்கு கொண்டு வந்துள்ளார்.

இதுவரை மறைமுக அரசியலில் இருந்து வந்தவரை திடீரென அழைத்து வந்து கட்சியின் உயர் பதவி அளித்து அதற்கு நாங்கள் பின் நிற்க வேண்டும் எனக் கூறுவது ஏற்புடையதல்ல. எனவே இந்த உட்கட்சி ஜனநாயகத்தை காக்க தொடர்ந்து போராடி வருகிறோம்.



மறைமுக பேரம் பேசி மதிமுகவை, திமுகவுடன் இணைக்க முயற்சி நடந்து வருவதாக சமீபத்தில் ஒரு ஊடகத்தின் வாயிலாக அறிந்தோம், அந்த செய்தி உண்மையெனில் நேரடியாக இணைத்துவிடுங்கள். அப்படி செய்தால் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கட்சி தொண்டர்கள் பிழைப்பார்கள் இல்லை என்றால் எங்களை போல் ஏமாற்றப்படுவார்கள் என்றார் செவந்தியப்பன்.

இது குறித்து விருதுநகர் மாவட்ட செயலாளர் சண்முக சுந்தரம் பிபிசி தமிழிடம் பேசுகையில், கடந்த ஆறு மாத காலமாக தொடர்ந்து கட்சிக்குள் குழப்பம் ஏற்பட்டு வந்தது. கட்சி தேர்தல் முறையாக நடைபெறவில்லை. கட்சியின் மூத்த தலைவர்களின் கருத்துக்களை உதாசீனப்படுத்திவிட்டு துரை வைகோவிற்கு பதவி வழங்கப்பட்டுள்ளது.

மதிமுகவின் கொள்கைகளில் முக்கிய கொள்கையே கட்சியில் வாரிசு அரசியல் கிடையாது என்பது தான். அதனை மீறி வைகோ அவரது மகனை கட்சியின் முக்கிய பொறுப்புக்கு கொண்டு வந்தது அர்த்தமற்றது. இதனை தட்டி கேட்ட கட்சியின் முக்கிய பொறுப்பில் உள்ளவர்களை கட்சியில் இருந்து நீக்க முயற்சி செய்து வருகின்றனர்.

எதற்கும், யாருக்கும் அஞ்சாத வைகோ தற்போது அவரது மகன் பிடியில் உள்ளார். துரை வைகோவின் பேச்சை கேட்டுக் கொண்டு கட்சியின் மூத்த உறுப்பினர்களை வைகோ புறம் தள்ளிவிட்டு கட்சி நடத்தி வருகிறார்.

நியாயத்தை தட்டி கேட்டதற்காக நாங்கள் பழிவாங்க பட்டுள்ளோம். மதிமுகவில் சர்வாதிகார ஆட்சி நடைபெற்று வருகிறது. இதே நிலை நீடித்தால் கட்சியின் நிலைமை என்னவாகும் என தெரியாத சூழ்நிலை ஏற்படும் என்கிறார் சண்முக சுந்தரம்.

மதிமுகவின் மூத்த உறுப்பினர்களின் குற்றச்சாட்டுகள் குறித்து ம.தி.மு.க. தலைமை நிலையைச் செயலாளர் துரை வைகோவிடம் பிபிசி தமிழ் கேட்டதற்கு அவர் பதிலளிக்கையில், காழ்ப்புணர்ச்சி காரணமாக சில மூத்த உறுப்பினர்கள் கட்சியின் மீது வீண் குற்றச்சாட்டை சுமத்தி வருகின்றனர்.

சட்டமன்ற தேர்தலில் சிவகங்கை மாவட்ட சட்டமன்ற உறுப்பினர் பதவிக்காக அண்ணன் செவந்தியப்பன் தலைமையிடம் சீட்டு கேட்டிருந்தார். ஆனால் கூட்டணியில் சிவகங்கை திமுகவுக்கு ஒதுக்கப்பட்டது. இருந்த போதிலும் மதிமுகவிற்கு சிவகங்கை சட்டமன்ற தொகுதியை ஒதுக்க தலைவர் வைகோ கடைசி வரை பல முயற்சிகளை மேற்கொண்டார். ஆனால் சிவகங்கை தொகுதி கிடைக்கவில்லை.

இதனால் கடந்த 9 மாதங்களுக்கு மேலாக செவந்தியப்பன் மற்றும் சில கட்சி மூத்த உறுப்பினர்கள் கட்சி மீது தொடர்ந்து அவதூறு பரப்பி வருகின்றனர். தலைவர் வைகோ பலமுறை அண்ணன் செவந்தியப்பன் உள்ளிட்ட பலரிடம் தொடர்பு கொள்ள முயற்சித்தார். ஆனால் அவர்கள் யாரும் முறையாக பதில் அளிக்கவில்லை.

இதனால் நானும், சட்டமன்ற உறுப்பினர் பூமிநாதனும், அண்ணன் செவந்தியப்பன் வீட்டிற்கு நேரில் சென்று பேச்சுவார்த்தை நடத்தி விரைவில் நல்ல வாய்ப்புகள் வழங்கப்படும் காத்திருங்கள் என்று கூறினோம். ஆனால் தனக்கு சீட் கிடைக்கவில்லை என்ற கோபத்தால் நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில், நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் கட்சியின் வெற்றிக்காக வேலை செய்யாமல் வெற்றிக்கு இடையூறாக பல இடங்களில் செயல்பட்டுள்ளனர்.

சிவகங்கை மாவட்ட செயலாளர் பதவியில் இருந்து உடனடியாக செவந்தியப்பனை நீக்க வேண்டும் என கட்சியினர் தொடர்ந்து தலைமைக்கு புகார் அளித்தனர். ஆனால் தலைவர் வைகோ செவந்தியப்பன் நீண்ட காலமாக தன்னுடன் பயணித்து வருவதால் அவர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை.

இவர்கள் கட்சி வலுவிழக்க பல இடங்களில் வேலை செய்துள்ளனர். கடந்த 9 மாதங்களில் மூன்று முறை மாவட்ட செயலாளர்கள் கூட்டத்திற்கு அழைப்பு கொடுத்தும் அவர்கள் கலந்து கொள்ளவில்லை. ஆனால் இவர்கள் தனியாக ஒரு இடத்தில் கூட்டம் போட்டு அந்தக் கூட்டத்தில் கட்சிக்கு எதிராக செயல்பட முடிவு செய்ததற்கான ஆதாரங்கள் என்னிடம் உள்ளது.

கருத்து வேறுபாடுகள் இருந்தால் நேரடியாக என்னிடம் வந்து சொல்லுமாறு தலைவர் சொல்லியும் இதுவரை தலைவரை சந்திக்க வில்லை. எம்எல்ஏ பதவி கிடைக்கவில்லை என்ற ஒரே காழ்ப்புணர்ச்சி காரணமாக இவ்வாறான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகிறது.

இன்று நான் கட்சி பதவிக்கு வர கூடாது என எதிர்ப்பு தெரிவிக்கும் விருதுநகர் மாவட்ட செயலாளர் சண்முக சுந்தரம்தான் துரை வைகோவால் மட்டுமே மதிமுகவின் தலைமை பொறுப்பேற்று கட்சியை வழி நடத்த முடியும் என கட்சிக்கு வருமாறு என்னை அழைத்தார் என்கிறார் துரை வைகோ. ■

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

39. குறித்த வேளையில் உணவை உண்ணாமல் இருப்பதால் ஏற்படத்தக்க ஒரு நோய்.
(1) உயர்குருதி அமுக்கம் (2) இரைப்பையழற்சி (3) நீரிழிவு

40. உடலுக்குச் சக்தியைத் தரும் உணவு.
(1) வல்லாரை (2) இறைச்சி (3) உருளைக்கிழங்கு

41. ஈக்கள் மொய்த்த உணவுகளை உண்பதால் ஏற்படத்தக்க நோய்.
(1) கழிச்சல் (2) நீர்வெறுப்பு (3) மலேரியா

42. பின்வரும் பிராணிகளுள் ஊர்வன **அல்லாதது.**
(1) தவளை (2) உடும்பு (3) ஆமை

43. 
படத்தில் காட்டப்பட்டுள்ள உபகரணம் பின்வரும் எதனைச் செய்வதற்கு மிகப் பொருத்தமானது?
(1) திருகு ஆணியைச் சுழற்றுவதற்கு
(2) மரப்பலகையில் துளையிடுவதற்கு
(3) தகட்டினை வெட்டுவதற்கு

44. பின்வருவனவற்றுள் இலங்கையின் கிராமிய விளையாட்டுக்களில் ஒன்று.
(1) கரப்பந்தாட்டம் (2) வலைப்பந்தாட்டம் (3) சடுகுடு

45. பயணத்திற்காகப் பாதையைப் பயன்படுத்தும் போது நாம் செய்யக் **கூடாதது.**
(1) கூட்டமாகச் சேர்ந்து உரையாடியபடி பயணித்தல்
(2) நடந்து செல்கையில் பாதையின் வலது புறத்தைப் பயன்படுத்துதல்.
(3) பாதையைப் பரிசீலிக்காது பாதைக்கு ஓடிச் செல்வதைத் தவிர்த்தல்.

46. 
பாடசாலையில் தயாரிக்கப்பட்ட கூட்டெருப் பாத்திரம் அருகே தரப்பட்டுள்ளது. இப்பாத்திரத்தினுள் இடக்கூடிய கழிவுப் பொருட்களில் இரண்டு.
(1) யோகட் கோப்பை, பொலிதீன் உறை
(2) கடதாசித்துண்டுகள், இலைகுழைகள்
(3) இலைகுழைகள், கண்ணாடித்துண்டுகள்

47. எரிகாயத்திற்கு உள்ளான ஒருவருக்கு முதலுதவி அளிக்கும் போது **செய்யக்கூடாதது.**
(1) எரியுண்ட இடத்தைக் குளிர்நீரினால் குளிரூட்டல்.
(2) எரியுண்ட இடத்தை மூடுதல்.
(3) எரிவின் மேல் எண்ணெய் அல்லது கொழுப்புகளைப் பூசுதல்.

48. பயிர்ச் செய்கைக்குத் தீங்கு விளைவிக்கும் பிராணிகள்,
(1) தண்டுகோதி, நத்தை (2) தேனீ, ஆந்தை (3) மண்புழு, தேனீ

49. கண்கள் காதுகள் ஊடாகத் தகவல்களைப் பெறக்கூடிய ஊடகம்,
(1) வானொலி (2) செய்திப்பத்திரிகை (3) தொலைக்காட்சி

50. சிவப்பு, வெள்ளை ஆகிய நிறங்களைக் கலப்பதால் பெறப்படும் நிறம்,
(1) ரோஸ் (2) செம்மஞ்சள் (3) கபிலம்

51. மின்குமிழ் ஒளிராத சுற்றினைக் காட்டும் வரிப்படம் எது?


(1) (2) (3)

52. அலுமினியப் பாத்திரத்தில் சமைக்கப்படும் உணவுடன் சேர்க்கக் **கூடாத** ஒரு பொருள்.
(1) கொறுக்காய் (2) இஞ்சி (3) கறுவா

53. தேசிய மரபுரிமையாகவும் உலக மரபுரிமையாகவும் கணிப்புப் பெற்றுள்ள இலங்கையின் இயற்கை இடங்களில் ஒன்று.
(1) சிகிரியா (2) பொலன்னறுவை புராதன நகர் (3) சிங்கராஜ வனம்

54. ஒருவர், வதிவை உறுதிப்படுத்தும் சான்றிதழைப் பெறச் செல்ல வேண்டியது.
(1) பிரதேச செயலாளரிடம் (2) சமுர்த்தி அலுவலரிடம் (3) கிராம அலுவலரிடம்

55. தான் சஞ்சரிக்கும் மேற்பரப்புகளில் ஒட்டிக்கொள்ளக் கூடிய விசேட பாதங்களைக் கொண்டுள்ள பிராணி.
(1) பல்லி (2) அணில் (3) கரப்பான்

56. உறுதியற்ற சதுப்பு நிலச்சூழலில் வளரும் கண்டல் தாவரங்கள் அசைவின்றி, தம்மை நிலைப்படுத்துவதற்கு அவை கொண்டுள்ள விசேட வேர்க் கட்டமைப்பு எது?
(1) மூச்சு வேர் (2) மிண்டி வேர் (3) தொங்கு வேர்

## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 30. (3) | 31.(1) | 32. (1) | 33. (2) | 34. (2) | 35. (1) | 36. (3) | 37. (3) | 38. (2) | 39. (2) |
| 40. (3) | 41.(1) | 42. (1) | 43. (2) | 44. (3) | 45. (1) | 46. (2) | 47. (3) | 48. (1) | 49. (3) |
| 50. (1) | 51.(1) | 52. (1) | 53. (3) | 54. (3) | 55. (1) | 56. (2) | | | |

### கல்வி tv CHANNEL-1

**24.03.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

### கல்வி tv CHANNEL - 2

**24.03.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



## மூதூர் மலையடி பிள்ளையார் ஆலய நிர்மாண சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி

மூதூர், மார்ச் 24

மூதூர், மலையடிப் பிள்ளையார் கோவில் நிர்மாணத்தில் இருந்து வந்த சர்ச்சைக்கு தற்போது முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. இக்கோவில் அமைப்பதற்கான காணி நேற்று முன்தினம் காலை வழங்கப்பட்டது.

மூதூர், 64 ஆம் கட்டை மலையடிப் பகுதியில் பல வருடங்களுக்கு மேலாக மலையடிப் பிள்ளையார் கோவில் இருந்து வந்தது.

இந்நிலையில், இக் கோவிலை புதிதாகக் கட்டுவதற்கு மூதூர் பிரதேச இந்துக் குருமார் சங்கத்தினர் கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் முயற்சித்தனர்.

அப்போது காணிக்கான ஆவணங்கள் இல்லையென மூதூர் பிரதேச செயலாளர் கோவில் நிர்மாணப் பணிகளை தற்காலிகமாக தடுத்து நிறுத்தினார்.

இதன்பின்னர் முறுகல் நிலை ஏற்பட்டு, பேச்சு வார்த்தைகளும் இடம்பெற்றிருந்தன.

இந்நிலையில், மூதூர் பிரதேச செயலக காணி உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மூதூர் பிரிவு அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர் உள்ளிட்டோர் நேற்று வருகைதந்து, மூதூர் பிரதேச இந்துக் குருமார் சங்கத்தினர் மற்றும் பொதுமக்களுடன் கலந்துரையாடி காணியை வழங்கினர்.

14 அடி நீளமும், 14 அடி அகலமும் கொண்டதாக மூதூர் மலையடிப் பிள்ளையார் கோவிலை அமைப்பதற்கு காணி கையளிக்கப்பட்டுள்ளதாக மூதூர் பிரதேச இந்துக் குருமார் சங்கத் தலைவர் சிவஸ்ரீ இ.பாஸ்கரன் குருக்கள் தெரிவித்தார். (அ)

## ‘ஐஸ்’ போதைப்பொருளுடன் காத்தான்குடியில் ஒருவர் கைது!

மட்டக்களப்பு, மார்ச் 24

காத்தான்குடி பொலிஸ் பிரிவில் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார் என மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்கவின் வழிகாட்டலில் காத்தான்குடி கடற்கரை வீதியில் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை இரவு 10 மணியளவில் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின்போது இவர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 9 கிராம் 650 மில்லி கிராம் ஐஸ் கைப்பற்றப்பட்டுள்ளது. (அ)

# தமிழ்-முஸ்லிம் மக்களின் நல்லுறவை சீர்குலைக்கும் காத்தான்குடி தவிசாளர்

### மட்டக்களப்பு மாநகர முதல்வர் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, மார்ச் 24

**மட்டக்களப்பில் முன்னேற்றமடைந்துவரும் தமிழ்-முஸ்லிம் மக்கள் மத்தியிலான உறவினை சீர்குலைக்கும் வகையிலான நடவடிக்கைகளை காத்தான்குடி நகரசபையின் தவிசாளர் முன்னெடுத்து வருவதாக மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன் தெரிவித்தார்.**

மட்டக்களப்பு மாநகர சபையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அண்மைக் காலமான மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் காத்தான்குடி நகரசபையின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் ஒரு முறை அப்பகுதிக்கு கள விஜயம் மேற்கொண்டிருந்தோம்.

இதன்போது அது தொடர்பான தகவல்கள் கிடைக்கப் பெற்றன. நாங்கள் அப்பகுதிக்கு சென்று அப்பகுதி மக்களுக்கு தெளிவூட்டல்களை வழங்கியிருந்தோம்.

இது தொடர்பில் காத்தான்குடி நகரசபைத் தவிசாளருக்கும் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தோம்.சட்ட திட்டங்களுக்கு எதிரான செயற்பாடுகள் என அதில் நாங்கள் தெரிவித்திருந்தோம்.ஆனால் அதற்கு எந்த விதமான பதில்களும் வழங்கப்படவில்லை.

அவர் தனது செயற்பாட்டை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றார். இது தொடர்பில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்,கிழக்கு மாகாண ஆளுநர், உரிய அமைச்சுகளுக்கும் கடிதங்களை அனுப்பியுள்ளோம்.

2017ஆம்ஆண்டின் சுற்றறிக்கையின் பிரகாரம் மாநகரசபையின் எல்லை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மாநகர சபையின் எல்லைகளை நினைத்தவாறு மாற்றமுடியாது. இருந்தபோதிலும் பிழையான தகவல்களை வைத்துக்கொண்டு இவ்வாறான செயற்பாடுகளை காத்தான்குடி தவிசாளர் முன்னெடுப்பது என்பது ஒரு இன முறுகலை ஏற்படுத்துவதற்கான அடித்தளமாகவே நான் கருதுகின்றேன்.

இரு இனங்களும் ஒன்றாக இணைந்து எமது உரிமைகளை, தேவைகளை பெற்றுக்கொள்ள முயற்சிகளை மேற்கொண்டு வரும் இந்த சந்தர்ப்பத்தில் இவ்வாறான இன முரண்பாடுகளை ஏற்படுத்தி மீண்டும் பிரிவுகளை ஏற்படுத்துவதற்கான முயற்சியாக இதனை கருதவேண்டியுள்ளது.

நேற்று முன் தினம் பள்ளி வாசல்கள் ஊடாக காத்தான்குடி நகரசபையில் வரிகளை செலுத்துமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.இது தொடர்பில் மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கியுள்ளேன்.



உடனடியாக அப்பகுதிக்கு சென்று வரிகளை அறிவீடு செய்யவும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குமாறும் பணித்துள்ளேன்.

மேலும் இந்த அறிவுறுத்தல்களை வழங்கிய பள்ளிவாசல்களுக்கு குறித்த அறிவிப்பு தொடர்பில் விளக்கம் கேட்டு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இதற்கு மேலாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் வரி அறிவீடு செய்வதற்கான முயற்சிகள் நடைபெற்றுள்ளது என்ற அடிப்படையில் காத்தான்குடி தவிசாளருக்கு எதிராகவும் அறிவிப்பு செய்த பள்ளிவாயல்களுக்கு எதிராகவும் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த எல்லைப்பகுதியில் மட்டக்களப்பு மாநகரசபை உத்தியோகத்தர்களை வரி அறவீடு செயற்பாடுகளை தீவிரப்படுத்துமாறும் பணித்திருக்கிறேன். ஆணையாளர் மிக விரைவாக அதனை செய்வார் என நம்புகின்றேன்-என்றார். (அ)

## இறால் வளர்ப்பு பண்ணை அமைப்பதை எதிர்த்து மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்!

மட்டக்களப்பு, மார்ச் 24

மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்தில் இறால் வளர்ப்புப் பண்ணை அமைக்கும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து அதனை தடுத்து நிறுத்தி தருமாறு கோரி பிரதேச மக்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வாகரை பிரதேச செயலகத்துக்கு முன்பு ஒன்றுகூடியவர்கள் கையில் வாசகங்கள் எழுதிய பதாதைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, பிரதேச செயலகத்தின் வாயில் கதவைப் பூட்டியும் செயலக உத்தியோகத்தர்கள் உள்ளே செல்லாதவாறும் தடுத்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள்.

பின்னர் பொலிஸாரின் தலையீடு மற்றும் பிரதேச செயலாளருடன் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கதவைத் திறந்துவிட்டனர்.

இதன்போது அவ்விடத்தில் அமைதியின்மை ஏற்பட்டது.

மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் இந்த திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாகவுள்ளதாகவும் அவர் இந்தத் திட்டத்தை கைவிட வேண்டுமெனவும் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.



இதன்போது பிரதேச செயலாளர் சம்பவ இடத்திற்கு வருகை தந்து கலந்துரையாடலை மேற்கொண்டார். ஆயினும் பேச்சு பயனற்று போனதால் பிரதேச செயலர் நிர்வாகம் அவ்விடத்தை விட்டு விலகிச் சென்றார்.

இரண்டாம் கட்டமாக மீண்டும் பேச்சு மேற்கொள்ளப்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் 10 பேர் வரவழைக்கப்பட்டு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

கலந்துரையாடலின்போது இத்திட்டம் குறித்து பல்வேறு குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டதுடன் இதனை உடனடியாக நிறுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

இத்திட்டத்துக்கு மக்கள் எதிர்ப்பு தெரிவிப்பதால் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு இது தொடர்பாக அறிக்கை சமர்ப்பிப்பதாகவும், தற்போது மேற்கொள்ளும் நில அளவை இடை நிறுத்துவதாகவும் கலந்துரையாடலின் போது பிரதேச செயலக நிர்வாகத்தினரால் தெரிவிக்கப்பட்டது. இதனை அடுத்து போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. (அ)

## திருகோணமலையில் தேசிய மகளிர் நிகழ்வு

திருமலை, மார்ச் 24

இலங்கை வங்கியின் கிழக்கு மாகாண அலுவலகத்தின் ஏற்பாட்டில் தேசிய மகளிர் தின நிகழ்வும் வீட்டுத்தோட்ட மரக்கன்றுகள் மற்றும் மரக்கறி விதைகள் நன்கொடை வழங்கும் நிகழ்வும் திருகோணமலை மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் நேற்று முன் தினம் இலங்கை வங்கியின் கிழக்கு மாகாண சந்தைப்படுத்தல் முகாமையாளர் என்.டி. ரகுராம் தலைமையில் இடம்பெற்றது.

என் உலகம் என் வழியில் எனும் தொனிப்பொருளில் ஆரம்பமான இந்த தேசிய மகளிர் தின நிகழ்வு உப்புவெளி மற்றும் கப்பல்துறை விவசாயப் போதனாசிரியர் பிரிவில் உள்ள 50க்கும் மேற்பட்ட பெண் பயனாளிகளை உள்ளடக்கியதாக இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் 50க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு வீட்டுத்தோட்ட மரக்கன்றுகள் மற்றும் மரக்கறி விதைகள் நன்கொடையாக வழங்கப்பட்டதுடன் வீட்டுத்தோட்டம் தொடர்பில் தெளிவுபடுத்தும் செயலமர்வு ஒன்றும் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதிகளாக இலங்கை வங்கியின் திருகோணமலை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் எம்.பரமேஸ்வரன்,இலங்கை வங்கியின் கிழக்கு மாகாண செயற்பாட்டு முகாமையாளர் சந்திக்க டி சில்வா, இலங்கை வங்கியின் திருகோணமலை மாவட்ட முகாமையாளர் எ.பிரதீபன், இலங்கை வங்கியின் கிழக்கு மாகாண சந்தைப்படுத்தல் முகாமையாளர் ந.து.ரகுராம் மற்றும் விவசாய போதனா சிரியர் ஜனாப் ஜே. ஜே. ஜோசட் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (அ)

# உக்ரைன் மேரியோபோல் நகரில் ஒரு இலட்சம் பேர் முற்றுகைக்குள்



கீவ், மார்ச் 24

ரஷ்யப் படைகளின் முற்றுகைக்குள் உள்ள உக்ரைன் - மேரியோபோல் நகரில் கடும் தாக்குதல்கள் தொடரும் நிலையில் அங்கு உணவு, தண்ணீர் உள்ளிட்ட எந்த வசதியும் இல்லாமல் சுமார் ஒரு இலட்சம் பேர் இன்னமும் சிக்கியுள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இன்றைய நிலவரப்படி, நகரத்தில் சுமார் 100,000 மக்கள் உள்ளனர். அவர்கள் பெரும் மனிதாபிமான நெருக்கடியில் சிக்கியுள்ளனர். ரஷ்யப் படைகளின் முழு முற்றுகைக்குள் உள்ள அவர்களுக்கு உணவு இல்லை, தண்ணீர் இல்லை, மருந்து இல்லை. தொடர்ச்சியான குண்டுவெடிப்புக்களால் அவர்கள் உயிர் பிழைக்க போராடி வருகின்றனர் என தனது பேஸ்புக் பக்கத்தில் அவர் கருத்து வெளியிட்டார்.

மனிதாபிமான நடவடிக்கைகள் மூலம் அங்குள்ள பொது மக்களை மீட்பதற்கான முயற்சிகள் ரஷ்யாவின் உக்கிர தாக்குதல்களால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் வொலோடிமிர் ஸெலென்ஸ்கி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஒரு மனிதாபிமான மீட்புக் குழுவினரை ரஷ்யப் படைகள் தடுத்து நிறுத்தின. உக்ரேனிய அரசாங்க ஊழியர்களும் அவர்களது பேருந்து ஓட்டுனரும் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர் அவர் கூறினார்.

கடும் சிரமங்களுக்கு மத்தியில் செவ்வாய்க்கிழமை மேரியோபோல் நகரில் இருந்து 7,026 குடியிருப்பாளர்கள் மீட்கப்பட்டனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த இரண்டு வாரங்களில் உக்ரைனுக்கு 100,000 தொன்களுக்கு மேல் மனிதாபிமான உதவிகள் கிடைத்துள்ளதாகவும் உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி கூறினார்.

இந்த வாரம் பிரஸ்ஸல்ஸில் நடைபெறும் நேட்டோ மாநாட்டில் உலகத் தலைவர்கள் கலந்துகொள்ளும் போது ரஷ்யாவுக்கு எதிராக மேற்கத்திய நாடுகளின் புதிய பொருளாதாரத் தடைகள் அறிவிக்கப்படும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

கடந்த செவ்வாயன்று பாப்பரசர் பிரான்சிஸுடன் பேசியதாகவும், உக்ரைனுக்கு வருமாறு அவருக்கு அழைப்பு விடுத்ததாகவும் ஜெலென்ஸ்கி கூறினார். அவரது பயணத்தை ஒழுங்கமைக்க முடியும். இது பாதிக்கப்பட்ட உக்ரேனியர்களுக்கு ஆறுதல் அளிக்கும் எனவும் உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி தெரிவித்தார். (அ)




# ரஷ்யாவை ஜி-20 அமைப்பிலிருந்து விலக்குவதற்கு அமெரிக்கா திட்டம்

நியூயோர்க், மார்ச் 24

ரஷ்யாவை ஜி20 அமைப்பில் இருந்து விலக்குவதற்கான நடவடிக்கையை அமெரிக்காவும் பிற மேற்கத்திய நாடுகளும் பரிசீலித்து வருவதாக சர்வதேச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ரஷ்யாவை மாற்றவேண்டும் என்ற பரிந்துரையை போலந்து, அமெரிக்க அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றம் உலகப் பொருளாதாரத்தைப் பாதிக்கும் பிரச்னைகள் குறித்து நடவடிக்கை எடுப்பதை நோக்கமாகக் கொண்டு குறித்த அமைப்பு செயற்பட்டு வருகின்றது.

இந்நிலையில் குறித்த அமைப்பில் இருந்து ரஷ்யாவை நீக்க கோருவது மேற்கிலிருந்து ரஷ்யாவிற்கு எதிராக இருக்கும் பொருளாதாரத் தடைகளை அதிகரிக்கும் என கூறப்படுகின்றது.

அத்தோடு சீனா, இந்தியா மற்றும் சவுதி அரேபியா உள்ளிட்ட பிற முக்கிய ஜி-20 நாடுகள் வீட்டோ அதிகாரம் கொண்ட நாடாக மாறக்கூடும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (அ)



# இதுவரை 10,500 உக்ரைனியர்கள் பிரான்ஸில் வதிவிடம் பெற்றனர்

பரிஸ், மார்ச் 24

போர் தொடங்கியதில் இருந்து இதுவரை 26 ஆயிரம் உக்ரைன் அகதிகள்பிரான்ஸின் எல்லைக்குள் வருகை தந்துள்ளனர் என்றும் அவர்களில் 10 ஆயிரத்து 500 பேருக்கு நாட்டில் வசிப்பதற்கான தற்காலிக அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகவும் பிரதமர் ஜீன் காஸ்ரோ அறிவித்திருக்கிறார்.

2ஆயிரத்து 400 உக்ரைன் சிறுவர்கள் பாடசாலைகளில் அனுமதிக்கப்பட்டுக் கல்விச் செயற்பாடுகளில் இணைந்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்காலிக வதிவிட அனுமதி பெற்றவர் களில் 40 வீதமான அகதிகள் பாரிஸ் பிராந்தியத்தில் தங்கியிருப்பவர்கள் ஆவர். மேலும் அகதிகள் வருகைதரக்கூடும் என்பதால் அவர்களுக்காக சுமார் ஒரு லட்சம் வதிவிட வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்று அரசு தெரிவித்துள்ளது.

இதேவேளை -

பிரான்ஸில் அதன் மக்கள் தொகைக்கு தேவையான அளவு அயடின் மாத்திரைகள் கையிருப்பில் இருப்பதாக சுகாதார அமைச்சர் ஒலிவியே வேரன் தெரிவித்திருக்கிறார்.ரஷ்யா - உக்ரைன் போரின் விளைவாக அணு ஆயுத மோதல் பற்றிய அச்சம் அதிகரித்துள்ளதை அடுத்தே அமைச்சர் இத்தகவலை ஊடகம் ஒன்றுக்கு வெளியிட்டுள்ளார்.

அணு ஆயுத சம்பவம் ஒன்றினால் ஏற்படுகின்ற அணுக் கதிரியக்கம் மனிதர்களது உடலில் ஏற்படுத்தக்கூடிய தைரொய்ட் புற்று நோய் ஆபத்தில் இருந்து அயடின் பாதுகாப்பு வழங்கும் என்பதால் அதனை வாங்கிச் சேமிப்பதில் பலரும் அக்கறை காட்டி வருகின்றனர்.

அவசர சமயத்தில் நாட்டின் முழுச் சனத் தொகையினருக்கும் பயன்படுத்துவ தற்கு 130 மில்லியன் அயடின் மாத்திரைகள் தேவை என்றும், நாட்டில் 95.7 மில்லியன் மாத்திரைகளே கையிருப்பில் உள்ளன என்றும் கடந்த ஆண்டின் இறுதியில் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் தெரியவந்தது. அதனைச் சுட்டிக் காட்டிக் கேள்வி எழுப்பியபோதே சுகாதார அமைச்சர் அயடின் போதியளவு கையிருப்பில் இருக்கிறது என்பதை உறுதிபடத் தெரிவித்துள்ளார். (அ)

# ஹைதராபாத் வேலைத்தளத்தில் தீ: 11 தொழிலாளர்கள் உடல் கருகி பலி!

ஹைதராபாத், மார்ச் 24

இந்தியா - தெலங்கானா மாநிலம் ஹைதராபாத்தில் மரத்தளபாட உற்பத்தி நிலையத்தின் பழைய பொருட்கள் சேமிப்பு கிடங்கு ஒன்றில் நேற்று அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 11 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

ஹைதராபாத்தில் உள்ள போய்குடா பகுதியில் தொழிற்சாலையில் பழைய பொருட்களை சேமித்து வைக்கும் கிடங்கில் வேலையை முடித்துவிட்டு முதல் தளத்தில் தொழிலாளர்கள் உறங்கிக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில் நேற்று அதிகாலை 4 மணியளவில் கீழ் தளத்தில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. தொழிலாளர்கள் முதல் தளத்தில் இருந்து வெளியேற ஒரு வழி மட்டுமே இருந்ததால் வெளியேற முடியாமல் அவர்கள் முதல் தளத்திலேயே சிக்கினர் என கூறப்படுகிறது.

தீ வேகமாகப் பரவியதால், 8 வெளிமாநிலத் தொழிலாளர்கள் உட்பட மொத்தம் 11 பேர் தீயில் சிக்கி உயிரிழந்தனர் என தெலங்கானா



பொலிஸார் தெரிவித்தனர்.

தகவல் அறிந்து 9 தீயணைப்பு வாகனங்களில் சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்கும் பணிகளில் ஈடுபட்டனர். முதல் தளத்தில் சிக்கியவர்களில் ஒருவர் மட்டும் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில் தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இழப்பீடாக தலா 5 இலட்சம் ரூபா வழங்கப்படும் என தெலங்கானா முதல்வர் சந்திரசேகர ராவ் அறிவித்துள்ளார். (அ)

# விபத்தை அடுத்து ஏற்பட்ட அச்சத்தினால் சீனாவில் 74 வீத விமான சேவைகள் ரத்து!

பீஜிங், மார்ச் 24

சீனாவில் 132 பேருடன் பயணித்த போயிங் 737 ரக விமானம் விழுந்து விபத்துக்குள்ளானதை அடுத்து பயணிகள் மத்தியில் ஏற்பட்ட அச்சம் காரணமாக நேற்று முன்தினம் சீனா முழுவதும் 74 வீதமான விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டன.

நேற்று முன்தினம் சேவையில் ஈடுபட இருந்த சுமார் 11,800 விமானங்களில் 74 வீதமான விமானங்கள் இரத்துச் செய்யப்பட்டன.

பெரும்பாலும் பீஜிங் மற்றும் ஷங்காய் இடையே சேவையில் ஈடுபடும் விமானங்கள் நேற்று முன்தினம் இரத்தாகின. இது உலகில் மிகவும் பரபரப்பான உள்நாட்டு விமான வழித்தடங்களில் ஒன்றாகும்.

சீனாவின் தென்மேற்கு மாகாணமான யுன்னான் தலைநகர் குன்மிங்கிலிருந்து குவாங்ஜோ நோக்கிச் சென்ற போயிங் 737 ரக விமானம், ஹூஜோ நகரத்திற்கு உட்பட்ட டெங்ஷியான் மலைப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை விழுந்து விபத்துக்குள்ளானது.

இந்த விமானத்தில் இருந்த 123 பயணிகளும், 9 ஊழியர்களும் உயிரிழந்திருக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

விபத்து நடைபெற்ற இடத்தில் தொடர்ந்து தேடுதல் மற்றும் மீட்புப் பணி நடைபெற்று வருகின்றபோதும் பயணம் செய்தவர்கள் குறித்த தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை.

விமானம் விபத்துக்குள்ளான பகுதியிலிருந்து சேறு படிந்த பணப் பைகள், ஏ.ரி.எம் அட்டைகள், பயணிகளின் அலுவலக அடையாள அட்டைகளை மட்டுமே மீட்க முடிந்தது.

விமான தரவுகளையும் விமானிகளின் உரையாடலையும் பதிவு செய்யும் கறுப்புப் பெட்டியை மீட்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. அதைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ட்ரோன்களுடன் மீட்புப் பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். (அ)

ஈழநாடு





# ஜசன் றோய்க்கு 2 போட்டி தடை!

லண்டன், மார்ச் 24

இங்கிலாந்து அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர் ஜசன் றோய் ஒழுங்கீனமாக நடந்து கொண்டமைக்காக இங்கிலாந்து கிரிக்கெட் சபை 2 போட்டிகளில் விளையாட தடை விதித்துள்ளது.

அத்துடன், அவருக்கு 2,500 ஸ்ரேலிங் பவுண் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 9 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்துள்ளது.

ஆனால், அவர் என்ன தவறு செய்தார் என்ற விவரத்தை இங்கிலாந்து கிரிக்கெட் சபை வெளியிடவில்லை.



# ஆஷ்லே பார்டி திடீர் ஓய்வு!

சிட்னி, மார்ச் 24

உலகின் முதல்நிலை வீராங்கனையான ஆஷ்லே பார்டி தொழில்முறை ரென்னிஸ் போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். இதன்மூலம் 25 வயதேயான விளையாட்டு உலகை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளார்.

அவுஸ்திரேலியரான ஆஷ்லே பார்டி இன்று சமூக வலைத்தளத்தின் தனது அறிவிப்பை வெளியிட்டார்.

தனது பதிவில், “நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். மேலும் ஒரு நபராக எனக்கு இது சரியானது என்று என் இதயத்தில் இப்போது எனக்கு தெரியும்”, என்று கூறியுள்ளார்.

ஆஷ்லே பார்டி 2019ஆம் ஆண்டு பிரெஞ்சு ஓப்பன் பட்டத்தைக் கைப்பற்றினார். இது அவரின் முதல் கிராண்ட்ஸ்லம் படமாக அமைந்தது. கடந்த ஆண்டு விம்பிள்டன், கடந்த ஜனவரியில் அவுஸ்திரேலிய ஓப்பன் என கிராண்ட்ஸ்லம் பட்டங்களை வென்றார்.

44 ஆண்டுகளின் பின்னர் அவுஸ்திரேலிய ஓப்பன் பட்டத்தை வென்றவர் என்ற பெருமைக்குரியவராக ஆஷ்லே திகழ்ந்தார். அவுஸ்திரேலியாவில் ரென்னிஸ் விளையாடும் சிறுவர்களின் எண்ணிக்கை 30வீதமாக அதிகரித்ததில் ஆஷ்லேயின் பங்களிப்பும் மகத்தானது என்று கூறப்படுகின்றது.

ஆஷ்லே 2014ஆம் ஆண்டும் ரென்னிஸிலிருந்து ஓய்வு பெற்றார். சிறந்த கிரிக்கெட் வீராங்கனையாகவும் வலம் வந்த அவர் பிக்பாஷ் லீக் போட்டிகளில் பங்கேற்றிருந்தார். 2018இலேயே ஆஷ்லே மீண்டும் ரென்னிஸ் விளையாட வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நெருக்கடியில் சென்னை; முதல் போட்டியில் அலி பங்கேற்பதும் சிக்கல்?

மும்பை, மார்ச் 24

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தீபக் சஹார் காயத்தால் விலகிய நிலையில், முதல் போட்டியில் மொயீன் அலியும் பங்கேற்பது சிக்கலாகியுள்ளது.

15ஆவது ஐ. பி. எல். தொடர் வரும் சனிக்கிழமை மும்பையில் ஆரம்பமாகிறது. முதல் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ், கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணிகள் மோதவுள்ளன.

இந்த நிலையில், மொயீன் அலி இங்கிலாந்திலுள்ள நிலையில் அவரின் வீசா விண்ணப்பம் தாமதமாகவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதனால், அவருக்கு இன்னும் வீசா வழங்கப்படவில்லை. சென்னை சுப்பர் கிங்ஸ் அணி பல முயற்சிகள் எடுத்தும் அதற்குப் பலனளிக்கவில்லை.



சனிக்கிழமை போட்டியில் அலி பங்கேற்பதானால், நேற்று மும்பைக்கு சென்றிருக்க வேண்டும். ஆனால், அவர் அங்கு செல்லவில்லை. 3 நாள் தனிமைப்படுத்தல் கட்டாயம் என்பதால் முதல் போட்டியில் அலி பங்கேற்பதும் கடினம் என்று தெரியவருகின்றது.

# டூ பிளசிஸ் பெங்களூரை சிறப்பாக வழிநடத்துவார்

மும்பை, மார்ச் 24

15ஆவது ஐ. பி. எல். தொடரில் பெங்களூர் அணியை டூ பிளசிஸ் சிறப்பாக வழிநடத்துவார் என்று அந்த அணியின் முன்னாள் தலைவர் விராட் கோலி தெரிவித்துள்ளார்.

15ஆவது ஐ. பி. எல். தொடர் மும்பையில் வரும் சனிக்கிழமை தொடங்குகிறது. மும்பையில் பயிற்சியை தொடங்கியுள்ள கோலி அளித்த நேர்காணலில்,

ஐ. பி. எல். ஏலத்தில் அனுபவ வீரரான டூ பிளசிஸை எடுக்கும் திட்டத்தில் தெளிவாக இருந்தோம். வீரர்கள் ஓய்வறையில் நாங்கள் மிகவும் மரியாதை அளிக்கும் ஒரு தலைவர் தேவை. அதாவது கட்டளை போடும் வீரர் தலைவராக வேண்டுமே தவிர, கோரிக்கைகள் வைக்கும் தலைவரல்ல. அவர் தென்னாபிரிக்க அணியின் டெஸ்ட் தலைவராக இருந்துள்ளார் -நிறைய சாதித்துள்ளார். அவர் பெங்களூர் அணியை வழிநடத்துவதில் மகிழ்ச்சி அடைகிறோம். நிச்சயம் இந்தப் பணியை மிகச்சிறப்பாக செய்வார். நான் உள்பட அனைவரும் அவருடன் நன்றாக பழகுகிறோம்.

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடங்கி இவ்வளவு தூரம் வந்திருப்பது நம்ப முடியாத ஒன்று. நான் தற்போது புத்துணர்ச்சியுடன் இங்கு திரும்பி இருக்கிறேன். ஏனெனில், பொறுப்பு மற்றும் கடமைகளில் இருந்து விலகி உள்ளேன். என்னுடைய வாழ்க்கையை மிகவும் நேசிக்கிறேன். எனக்கு என்று ஒரு குடும்பம் வந்துவிட்டது. மகளுடன் அதிக நேரத்தை செலவிடுகிறேன். என்னை பொறுத்தவரை அளவற்ற மகிழ்ச்சியுடனும், உற்சாகத்துடனும் வாழ்க்கையை கொண்டு செல்ல வேண்டும். அதே சமயம் எனக்கு பிடித்த கிரிக்கெட்டையும் விளையாடுகிறேன். நான் என்ன செய்ய வேண்டும் என்பதில் துல்லியமாக இருக்கிறேன். களத்தில் எப்போதும் போல் ரசித்து அனுபவித்து விளையாடி அணிக்கு முழு பங்களிப்பை அளிப்பேன்”, என்றார்.







# சங்ககார, சச்சினை முந்தினார் ஸ்மித்!

லாகூர், மார்ச் 23

150 இனிங்ஸ்களில் 7993 ஓட்டங்களைக் குவித்து சங்ககார (7913), சச்சின் டெண்டுல்கர் (7869) ஆகியோரின் சாதனைகளை முறியடித்துள்ளார் ஆஸியின் ஸ்ரீவ் ஸ்மித் 24 ஆண்டுகளுக்கு பிறகு பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் சென்றுள்ள பட் கம்மின்ஸ் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது.

முதலிரு போட்டிகளும் சமநிலையில் முடிவடைந்த நிலையில், மூன்றாவது புாட்டி திங்கட்கிழமை ஆரம்பமானது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முதல் இனிங்ஸில் 391 ஓட்டங்களை குவித்தது.

முதல் இனிங்ஸில் ஸ்ரீவ் ஸ்மித் 59 ஓட்டங்களை எடுத்தார். இதன்மூலம் டெஸ்ட் அரங்கில் 150 இனிங்ஸ்களில் 7,993 ஓட்டங்களை குவித்துள்ளார். இதன் மூலம் இலங்கையின் குமார் சங்ககார(150 -7913 ஓட்டங்கள்), சச்சின் டெண்டுல்கர் (150 - 7,869) ஆகியோரின் சாதனைகளை முறியடித்துள்ளார்.

# மே மாதத்துக்கு பின் தேர்தல் தயார் நிலையில் இருங்கள்!

## ஆளுங்கட்சியினருக்கு பஸில் பணிப்புரை



**கொழும்பு, மார்ச் 24**

**மே மாதத்துக்கு பிறகு தேர்தலொன்று நடைபெறலாம். எனவே, அதனை எதிர்கொள்வதற்கு தயார் நிலையில் இருங்கள்.**

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்களுக்கு, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர்களுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

இதன்போது கட்சியின் செயற்பாடுகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. அத்துடன், அரசில் இருந்து வெளியேற்றப்பட்டவர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் பிரசாரத்துக்கு உரிய வகையில் பதிலடி கொடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கூட்டத்தின் இறுதித் தருவாயில், மே மாதத்துக்கு பிறகு தேர்தல் ஒன்று இடம்பெறும். எனவே, அதற்கான ஏற்பாடுகள் பற்றி விழிப்பாகவே இருங்கள் என பஸில் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

பெரும்பாலும் ஜூன் மாதம் உள்ளாட்சிமன்றத் தேர்தல் நடத்தப்படலாம் என அறிய முடிகின்றது. (அ)

# சுகாதார வழிகாட்டல்களை சகலரும் பின்பற்றவேண்டும்

## ஹேமந்த ஹேரத் வேண்டுகோள்



கொழும்பு, மார்ச் 24

பண்டிகைக் காலத்தில் நாட்டில் மீண்டும் கொரோனா தலைதூக்குவதைத் தடுப்பதற்காக எதிர்வரும் பண்டிகைக் காலத்துக்கான சுகாதார வழிகாட்டல்களை அனைவரும் பின்பற்றவேண்டும் என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

பூஸ்டர் டோஸ் பெறாத அனைவரும் அடுத்த சில நாட்களுக்குள் அதனை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவர் கூறினார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே ஹேமந்த ஹேரத் இதனைத் தெரிவித்தார். (அ)




# ஊர்காவற்றுறையில் குடும்ப அட்டைக்கு 500 ரூபாய்க்கு மட்டும் மண்ணெண்ணெய்!

யாழ்ப்பாணம், மார்ச் 24

ஊர்காவற்துறையில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஒரு குடும்ப பங்கீட்டு அட்டைக்கு 500 ரூபாய்க்கு மண்ணெண்ணெய் வழங்கப்படுகின்றது.

அத்தோடு குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசல் இல்லை என்ற அறிவித்தலும் ஒட்டப்பட்டுள்ளது.

ஊர்காவற்துறை பிரதேச செயலாளர் பிரிவில் ஒரே ஒரு எரிபொருள் நிரப்பு நிலையம் மாத்திரமே உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-03)

# மருத்துவர் சாபியின் சம்பள நிலுவையை செலுத்த நடவடிக்கை!

கொழும்பு, மார்ச் 24

கட்டாய விடுமுறை வழங்கி வேலைநீக்கம் செய்யப்பட்ட குருநாகல் வைத்தியசாலையின் மருத்துவர் சாபி சிஹாப்தீனின் சம்பள நிலுவை மற்றும் இதர கொடுப்பனவுகளை செலுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.சட்டமா அதிபர் இந்த விடயத்தை நீதிமன்றத்திடம் தெரிவித்துள்ளார்.

அவரை கட்டாய விடுமுறை வழங்கி வேலைநீக்கம் செய்யப்பட்ட காலத்துக்கான கொடுப்பனவுகளே இவ்வாறு செலுத்தப்படவுள்ளன. (அ)

# ரூ. 300 வரை உயர்ந்த டொலரின் பெறுமதி

கொழும்பு, மார்ச் 24

நாட்டிலுள்ள வர்த்தக வங்கிகளில் நேற்றைய நாணய மாற்று விகிதத்தின் பிரகாரம், டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 285 ரூபா முதல் 290 ரூபா வரை அதிகரித்தது.

இதேவேளை, வங்கிகள் அற்ற ஏனைய நாணய மாற்று நிலையங்களில் டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி 309 ரூபா வரை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நாணய நிதியத்தை நாடும் முடிவு; அமெ. துணைச் செயலர் வரவேற்பு

கொழும்பு, மார்ச் 24

தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காக சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதற்கு தீர்மானித்திருப்பதை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள அமெரிக்க அரசியல் விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் விக்டோரியா நுலண்ட் இதனைத் தெரிவித்தார். மேலும், மாகாண சபை தேர்தலை விரைவில் நடத்து மாறும் அமெரிக்கா இலங்கையை அறிவுறுத்துவதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# நீர் கட்டணமும் உயரும்!

கொழும்பு, மார்ச் 24

மின்சார கட்டணம் அதிகரிக்கப்பட்டால் நீர் கட்டணமும் அதிகரிக்கப்படும் என நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இதுவரை எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என தெரிவித்த அவர், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையை நட்டத்தில் இயங்க முடியாது எனவும் கூறினார்.

இதேவேளை, கடந்த 10 வருடங்களாக நீர் கட்டணங்கள் அதிகரிக்கப்படவில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# லிந்துலை நகர சபைக்கு புதிய தலைவர் நியமனம்

கொழும்பு, மார்ச் 24

தலவாக்கலை லிந்துலை நகர சபையின் புதிய தலைவராக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் சந்தன பிரதீப் குணதிலக்க தெரிவாகியுள்ளார்.

தலவாக்கலை லிந்துலை நகர சபையின் தலைவராக செயற்பட்ட அசோக சேபால அண்மையில் அப்பதவியிலிருந்து இடைநிறுத்தப்படுவதாக மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யு. கமகேயினால் அதிவிசேட வர்த்தமானியொன்று வெளியிடப்பட்டது.

அதற்கிணங்க தலவாக்கலை லிந்துலை நகரசபையில் உப தலைவராக பதவி வகித்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர் லெட்சுமன் பாரதிதாஸன் தற்காலிக தலைவராக பொறுப்பேற்றிருந்தார்.

இந்நிலையில், நேற்று தலவாக்கலை லிந்துலை நகர சபையின் புதிய தலைவர் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பூஸ்டர் இறக்குமதிக்கு சில காலம் செல்லும்

கொழும்பு, மார்ச் 24

கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்துவதற்காக மூன்றாவது தடுப்பூசியாக பயன்படுத்தப்பட்டு வரும் பூஸ்டர் தடுப்பூசியின் கையிருப்பு முடிவடைந்தால் அதனை மீண்டும் இறக்குமதி செய்வதற்கு சில காலம் செல்லும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் இதுவரை பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாதவர்கள் முடிந்தவரை விரைவாக பெற்றுக்கொள்ளவேண்டும் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொள்வதில் பொது மக்கள் மத்தியில் மிகுந்த ஆர்வம் இருப்பதாகவும் அவர் கூறினார். (அ)

# இந்தியா, சீனாவை அடுத்து ஆஸியிடமும் 200 மில்லியன் டொலர் கடன் கோரிய அரசு

கொழும்பு, மார்ச் 24

பருப்பு மற்றும் பால்மா இறக்குமதிக்காக அவுஸ்திரேலிய அரசாங்கத்திடம் 200 மில்லியன் டொலர் கடன் கோரப்பட்டுள்ளது என நிதி அமைச்சின் செயலாளர் எஸ். ஆர்.ஆட்டிக்கல தெரிவித்தார்.

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தனவினால் இந்த கடன் தொகை கோரப்பட்டது என அவர் மேலும் கூறினார்

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சீனாவிடம் கோரப்பட்டுள்ள 2.5 பில்லியன் டொலர் கடனில் 1.5 பில்லியன் டொலர் மருந்துகள், அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் கைத்தொழிலுக்கான மூலப்பொருட்கள் இறக்குமதிக்காக செலவிடப்படவுள்ளது. ஒரு பில்லியன் டொலர் கடன் தொகையை, இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பை வலுப்படுத்த பயன்படுத்த எதிர்பார்த்துள்ளோம்-என்றார்.

இதேவேளை, மூன்று வாரங்களுக்கு போதுமான எரிபொருள் கையிருப்பில் உள்ளதாகவும் இந்திய அரசாங்கம் இதுவரை 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை எரிபொருள் இறக்குமதிக்காக வழங்கியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# குளவிக் கொட்டுக்கு இலக்காகி சிறுமி பலி

கொழும்பு, மார்ச் 24

இராகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மந்திரிதென்ன கிராமத்தில் குளவி கொட்டுக்கு இலக்காகி ஐந்து வயது சிறுமியொருவர் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார்.

கடந்த திங்கட்கிழமை மதியம் தனது தாயுடன் அவர் களது விவசாய நிலத்துக்குச் சென்றபோது, குளவி கலைந்து இருவரையும் கொட்டியுள்ளது.

இதனையடுத்து, இவர்கள் உடனடியாக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு சிகிச்சை பலனின்றி ஐந்து வயது சிறுமி உயிரிழந்துள்ளார் என இராகலை பொலிஸார் தெரிவித்தனர்.அத்துடன்தாய்தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

## தமிழர்...

அத்துடன், தமிழ் மக்களின் சுயநிர்ணய ஆட்சிமுறை என்ற நீண்டகால அபிலாசையை பூர்த்தி செய்யக்கூடிய ஒரு நிரந்தர தீர்வை எட்டும்வரை ஒரே நாட்டுக்குள் அரசியல் தீர்வு காண்பதற்கான பரிந்துரையாக குறைந்தபட்சம் ஏற்கனவே அரசியலமைப்பில் உள்ள அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை அதன் ஆரம்ப வடிவிலேயே, முழுவதுமாக செயல்படுத்த வேண்டும் இத்தகைய நடவடிக்கை ஒன்று மாத்திரமே தற்போதைய பொருளாதார அவலநிலையில் இருந்து நமது நாட்டை மீட்பதற்கான ஒரே வழி என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், "நாட்டின் நிலைமையைப் பற்றி ஆழமான பொருளாதாரப் பகுப்பாய்வைச் செய்தால், நாட்டின் தற்போதைய பொருளாதார அவலத்திற்கு கோவிட் பெருந்தொற்று மாத்திரம் காரணம் அல்ல என்பதை நீங்கள் தெளிவாகக் காணலாம். பல தசாப்தங்களாக நாட்டில் நிலவும் இன நெருக்கடியை, அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களின் கொள்கை, அணுகுமுறை மற்றும் தவறான நிர்வாகக் கையாளுகையே தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு உண்மையான காரணமாகும்.

சுயாட்சி அதிகாரத்துக்காக தமிழ் மக்களின் அபிலாசை கோரிக்கைக்கு முன்னதாகவே எமது நாட்டின் அனைத்து சமூகங்களாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு சிறந்த அரசியல் தீர்வை அடைந்திருக்க முடியும். எவ்வாறாயினும், சிங்கள - பௌத்த மேலாதிக்கத்தின் சித்தாந்தத்தால் உந்தப்பட்ட அரசாங்கங்கள் அரசியல் பிரச்னைக்கு இராணுவ தீர்வையே தேர்ந்தெடுத்தன. உண்மையில், அதுவே இன்றைய பேரழிவுகரமான கடன் நெருக்கடிக்குள் நம் நாட்டைத் தள்ளிவிட்டுள்ளது.

நீங்கள் வரலாற்றை ஆழமாக ஆராய்ந்தால், பல தசாப்தங்களாக சிங்கள - பௌத்த பெரும்பான்மை சித்தாந்தத்துடன் நடாத்தப்பட்ட யுத்தமானது இன்று எமது நாட்டின் அனைத்து சமூக மக்களினதும் தோள்களில் ஒட்டுமொத்த பொருளாதாரச் சுமையையும் சுமத்தியுள்ளது.

2009 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளை தோற்கடித்த பின்னருங்கூட, தமிழ் மக்களின் மனதை வெல்வதற்கான எந்தவோர் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் தொடர்ந்து வந்த எமது நாட்டு அரசாங்கங்கள் மேற்கொள்ளவில்லை. மாறாக நீங்கள் பாதுகாப்பு செயலாளராக செயல்பட்ட அப்போதைய அரசாங்கம், தமிழ் மக்களை யுத்தத்தில் வெற்றிகொண்டுவிட்டோம் என்கின்ற மனப்பான்மையுடன் தொடர்ந்தும் எமது நாட்டை ஆட்சி செய்து தமிழ் மக்களை அந்நியப்படுத்தியது. அதுவே, அந்நேரத்தில் பெரும் ஆற்றலையும் விருப்பத்தையும் கொண்டிருந்த புலம்பெயர்ந்த தமிழர்கள் நம் நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிப்பதை தடுத்திருத்தது.

2009 இல் போரை முடிவுக்குக் கொண்டு வந்த அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் எவ்வளவோ விடயங்களைச் செய்திருக்கலாம். 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு அப்பால் சென்று தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் வகையிலான அரசியல் தீர்வொன்றை நாட்டில் உள்ள அனைத்து சமூகங்களாலும் ஏற்றுக்கொள்ளக் கூடியவகையில் காணப்போவதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலர் உட்பட பல்வேறு சர்வதேச தலைவர்களுக்கும் உறுதியளித்திருந்தார். அவர் அதனைச் செய்திருந்தால், புலம்பெயர்ந்த தமிழ் மக்களிடமிருந்து இன்னும் அதிகமான முதலீட்டாளர்களை ஈர்த்திருப்பார்.

எமது நாட்டில் முதலீடு செய்ய ஆர்வத்துடன் வந்த புலம்பெயர் தமிழர்கள் மத்தியிலும் கடுமையான விதிமுறைகளைக் கடந்து அரசாங்கத்தின் சிங்கள அதிகாரிகளிடம் அனுமதி பெறுவது மிகவும் கடினமாக இருந்தது. அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் மேம்படுத்தப்பட்ட இந்த அதிகாரிகளின் சிங்கள - பௌத்த பெரும்பான்மை மனோநிலை, அந்த முதலீட்டாளர்களின் பெரும் உற்சாகத்தை பெருமளவில் சிதைத்துவிட்டது. முதலீட்டாளர்கள் மீது சுமத்தப்பட்ட தாங்க முடியாத மற்றும் சட்டத்திற்குப் புறம்பான சுமைகள் அவர்கள் தங்கள் பணத்தை எடுத்துக்கொண்டு அவர்கள் வசிக்கும் நாடுகளுக்குத் திரும்பிச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது - என்றுள்ளது.

## புலம்பெயர்...

கனடா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் உள்ள புலம்பெயர் மக்களுடன் கலந்துரையாடுவதன் முக்கியத்துவத்துவம் குறித்து விக்ரோறியா நூலண்ட் சுட்டிக்காட்டியமைக்கு பதிலளிக்கும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் சர்வகட்சி மாநாட்டில் முன்வைக்கப்பட்ட விடயங்கள் குறித்தும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள கலந்துரையாடல் தொடர்பிலும் ஜனாதிபதி திருமதி நூலண்டிற்கு தெளிவுபடுத்தினார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் பசுமை தொழிநுட்பத்தை இந்த நாட்டில் அறிமுகப்படுத்தவும், சைபர் மற்றும் தகவல் தொழிநுட்பத் துறைகளின் முன்னேற்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று திருமதி நூலண்ட் இதன்போது தெரிவித்தார்.

கொவிட் தொற்றுநோய் மற்றும் ஏனைய நாடுகளில் இடம்பெறுகின்ற நிகழ்வுகளினால், இந்நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள தாக்கத்தைத் தணிப்பதற்காக, சர்வதேச நாணய நிதியத்திற்குச் செல்ல தீர்மானித்ததாக ஜனாதிபதி அவர்கள் தெரிவித்தார். அந்த தீர்மானம் தொடர்பாகவும், அதேபோன்று உண்மையைக் கண்டறியும் பொறிமுறைக்கும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் திருத்தத்திற்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் திருமதி நூலண்ட் அவர்கள் பாராட்டினார் என்றும் ஊடகப்பிரிவின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

## நுகர்வோர்...

இதன்போது, எரிவாயு விநியோக விபரங்களை அதிகார சபையால் வழங்கப்பட்ட படிவத்தை நிரப்புவதன் மூலம் பெறவேண்டும், பிரதேச ரீதியாக தங்களிடம் இருப்பிலுள்ள எரிவாயுக்களை பிரித்து முகவர்களே பங்கீட்டு அட்டைமுறையில் வழங்குதல் வேண்டும், இயன்றவரை வியாபார நிலையங்களுக்கு இருப்பிலுள்ள மூன்றில் ஒரு பகுதியையேனும் வழங்க முன்வரவேண்டும்.

பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாதவகையில் விநியோக இடத்தில் சிலிண்டர் விநியோகம் இடம்பெற வேண்டும், எரிவாயு விநியோகம் தொடர்பான அறிவுறுத்தல் பலகை காட்சிப்படுத்தப்படுத் வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளன.

இதன்போது, முறைகேடான வியாபார நிலையங்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அத்துடன், எரிபொருள் நிரப்பு நிலையங்களும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. (ஐ-3)

## மாகாண...

இலங்கை வந்துள்ள திருமதி நூலண்ட் நேற்று வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸை சந்தித்துக் கலந்துரையாடினார். அதன் பின்னர் பத்திரிகையாளர்களிடம் பேசிய அவர்,

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை வெள்ளிக்கிழமை சந்தித்துப் பேசுவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எடுத்த நடவடிக்கையை வரவேற்பதாகவும் கூறினார்.

மிகவும் கடினமான மற்றும் முக்கிய தருணத்தில் தாம் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளதாகவும் இந்த தருணத்தில்

இலங்கைக்கு ஆதரவளிக்க தயாராக இருப்பதாகவும் சர்வதேச நாணய நிதியத் திடம் உதவி பெற இலங்கை அரசாங்கம் எடுத்த முடிவு துணிச்சலான நடவடிக்கை எனவும் கூறினார். (ஐ)

## பட்டியில்...

கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ

## வற் வரி...

யாப்பா தலைமையில் நேற்றுமுன்தினம் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற கூட்டத்தில் இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை குறிப்பாணை எண். MF / FP / 32 / CM / 2021/212 மற்றும் நடைமுறைப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட 14 டிசம்பர் 2021 திகதியிட்ட அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரிக் கொள்கை முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்த இந்த வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 2022 ஜனவரி 1 முதல் நிதிச் சேவைகளை வழங்குவதற்கான பெறுமதி சேர் வரி 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக அதிகரிக்கப்படும். கூடுதலாக, இந்தத் திருத்தம், ஏதேனும் தொற்றுநோய் அல்லது பொது அவசர நிலை ஏற்பட்டால், அரசு மருத்துவமனைகள் மற்றும் சுகாதார அமைச்சுக்கு வழங்கப்படும் மருத்துவ உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் மருந்து நன்கொடைகளுக்கு மட்டும் பெறுமதி சேர் வரி விலக்கு அளிக்கும். வரித் திருத்தச் சட்ட வரைவு எதிர்வரும் 24ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (ஐ)

## சர்வகட்சி...

- இவ்வாறு சர்வக் கட்சி மாநாட்டில் கடும் சீற்றத்தை வெளிப்படுத்தினார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிமரசிங்க.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஜனாதிபதி செலயகத்தில் நேற்று சர்வக்கட்சி மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டை பிரதான எதிர்க்கட்சிகள் புறக்கணித்தாலும், ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பங்கேற்றிருந்தார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர்,

நாடு தற்போது எதிர்நோக்கியிருக்கும் பிரச்னைகளில் இருந்து மீள்வதற்கான வழிமுறைகள் பற்றி ஆராயவே நாம் இங்கு வந்தோம். மாறாக கட்சி அரசியலை முன்னெடுப்பதற்காக அல்ல. எனினும், குறுகிய அரசியல் நோக்கில், தற்போதைய நிலைமைக்கு கடந்த அரசுதான் பொறுப்பு என மத்திய வங்கி ஆளுநர் குறிப்பிடுகின்றார். அதற்கு என்னாலும் பதில் வழங்க முடியும். பிறகு அவர் கருத்து வெளியிடுவார். அதற்கு நான் பதில் வழங்குவேன். அப்படியானால் இந்த பிரச்னையை பற்றி மட்டும்தான் பேசவேண்டியிருக்கும்.

இறுதியில் விஜய மன்னன் இங்கு வந்திருக்காவிட்டால் பிரச்னை ஏற்பட்டிருக்காது என்ற முடிவுக்கும் வரக்கூடும். அதேபோல எதிரணிகளை தோற்கடிக்க நாம் இங்குவரவில்லை. எதிர்காலத்தில் அவர்களையும் இணைத்தக்கொள்ளும் நோக்கில்தான் வந்துள்ளோம்." - என்றார் ரணில்.

அதன்பின்னர் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, மத்திய வங்கி ஆளுநரின் அறிவிப்பு உங்களுக்கு ஏதேனும் மன வருத்தத்தை ஏற்படுத்தியிருந்தால் அதற்காக மன்னிப்பு கோருகின்றோம். கடந்த கால நிலைவரம் பற்றியே அவர் கூறவிளைந்துள்ளார் - என்றார்.

அதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை தொடர்பிலும் ரணில் இதன்போது கருத்து வெளியிட்டார். நிதி அமைச்சருடன் இது பற்றி விளக்கம் கோரினார்.

அறிக்கை எமக்கு கிடைக்கவில்லை. வரைவு நகல்தான் கிடைத்துள்ளது. அதனை வழங்கமுடியாது என பஸில் பதிலளித்தார். (அ)

தலைமையில் ஜனாதிபதி செலயகத்தில் நேற்று நடைபெற்ற சர்வ கட்சி மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடு கையிலேயே சுமந்திரன் எம்.பி. மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதார நெருக்கடியால், மக்கள் பட்டினியில் வாடும் நிலை உருவாகியுள்ளது. வடக்கில் இருந்து ஒரே நாளில் 16 பேர் தமிழகம் சென்றுள்ளனர். இந்நிலைமை தொடரக் கூடாது.

தற்போதைய நிலைமையில் இருந்து மீள்வதற்கான பொறிமுறை அவசியம். அதற்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்கவேண்டும் - என்றார். (அ)

## ஆறரை...

முதல் மதியம் ஒரு மணி வரையிலும், ரி, யூ, வி, டபிள்யூ வலயங்களில் மதியம் ஒரு மணி முதல் மாலை 5.30 மணி வரையிலும், பின்னர், பி. கியூ, ஆர், வலயங்களில் மாலை 5.30 மணி முதல் இரவு 7.20 மணி வரையிலும், எஸ், ரி, யூ வலயங்களில் இரவு 7.20 தொடக்கம் இரவு 9.10 மணி வரையிலும், வி, டபிள்யூ வலயங்களில் இரவு 9. 10 முதல் இரவு 11 மணி வரையிலும் மின்வெட்டு நடைமுறையில் இருக்கும்.

இதேபோல, ஏ, பி, சி, டி, வலயங்களில் காலை 8 மணி முதல் முற்பகல் 11.20 வரையிலும் ஈ, எவ், ஜி, எச் வலயங்களில் முற்பகல் 11.20 மணி முதல் பிற்பகல் 2.40 மணி வரையிலும், ஐ, ஜே, கே, எல், வலயங்களில் பிற்பகல் 2.40 மணி முதல் மாலை 6 மணி வரையிலும், பின்னர், ஏ, பி, சி, டி வலயங்களில் மாலை 6 மணி முதல் இரவு 7.40 மணி வரையிலும், ஈ, எவ், ஜி, எச் வலயங்களில் இரவு 7.40 மணி முதல் இரவு 9.20 மணி வரையிலும், ஐ, ஜே, கே, எல் வலயங்களில் இரவு 9.20 முதல் இரவு 11 மணி வரையிலும் மின்வெட்டு நடைமுறையில் இருக்கும். (ஐ)

## நெருக்கடிக்கு...

இறக்குமதியா நீண்டகால உத்திகளை முன்னெடுப்பதன் மூலம் பொருளாதாரத்தை ஸ்திரமான நிலைக்கு கொண்டு வர வேண்டியதன் அவசியத்தையும் இதன்போது ஜனாதி பதி கூறினார்.

நேற்று முற்பகல் கோட்டை ஜனாதிபதி மாளிகையில், சர்வகட்சி மாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சர்வகட்சி மாநாடு நேர்மையான ஒரு முயற்சி ஆகும். இதில் எந்தவித அரசியல் இலாபமோ குறுகிய நோக்கமோ கிடையாது எனக்கூறிய அவர், அரசாங்கத்தின் அழைப்பை ஏற்றதுடன், அதனை தேசிய தேவையாகக் கருதி பங்கேற்ற அனைத்து கட்சிகளுக்கும் நன்றி தெரிவித்த ஜனாதிபதி, ஏனைய கட்சிகளும் வருகை தந்து, தமது நிலைப்பாட்டை சர்வகட்சி மாநாட்டின் முன்னிலையில் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார். சமர்ப்பிக்கப்பட்ட அனைத்துக் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை மீளாய்வு செய்வதற்கு பொறிமுறை ஒன்றை உருவாக்கி பயனுள்ள முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்காக குழுவொன்றை அமைக்க முடியும் என்றும் சொன்னார்.

இந்த மாநாட்டில், ஐக்கிய தேசியக் கட்சி, சிறீ லங்கா சுதந்திரக் கட்சி, சிறீ லங்கா பொதுஜன பெரமுன, மக்கள் ஐக்கிய முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தேசிய காங்கிரஸ், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், ஐக்கிய மக்கள் கட்சி, சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், சிறீலங்கா மகஜன கட்சி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய முஸ்லிம் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை அமைப்பு, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஆகிய கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

லங்கா சமசமாஜ கட்சியின் பேராசிரியர் திஸ்ஸ விதாரண மற்றும் வண. அத்துரலியே ரத்ன தேரர், 11 பங்காளிக் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தி இம்மாநாட்டில் கலந்துகொண்டனர் என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# வடக்கு-கிழக்கில் பொது வாக்கெடுப்பு தமிழகம் அதை வலியுறுத்தவேண்டும்

## வைகோவுடனான சந்திப்பில் சிவாஜிலிங்கம்

சென்னை, மார்ச் 24

**தமிழ்நாட்டின் முதலமைச்சரும் அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரு தூதுக்குழு அமைத்து, டில்லி சென்று குடியரசுத் தலைவர், பிரதமர் மற்றும் கட்சித் தலைவர்களைச் சந்தித்து தமிழீழமா அல்லது இலங்கையுடன் சேர்ந்து வாழ்வதா? என்ற தலைப்பில் இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாண மக்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்தவேண்டும் என்று வலியுறுத்தவேண்டும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தமிழகத்தில் ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

தமிழக பயணத்தின்போது வைகோவை அவருடைய தாயகம் இல்லத்தில் சிவாஜிலிங்கம் சந்தித்துக் கலந்துரையாடினார்.

குறித்த சந்திப்புத் தொடர்பில் மறுமலர்ச்சி தி.மு.க தலைமை நிலையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை பாராளுமன்றத்தில் இரண்டு முறை உறுப்பினர் பொறுப்பு வகித்த, தமிழ்த் தேசியக் கட்சி செயலாளர் நாயகம் சிவாஜிலிங்கம் அவர்கள், 20 03 2022 தாயகத்தில், மறுமலர்ச்சி தி.மு. கழகப் பொதுச் செயலாளர் வைகோ அவர்களைச் சந்தித்தார். பொன்னாடை அணிவித்தார்.



ஈழத்தமிழர்களுடைய பிரச்னைகளின் தொடக்க காலம் முதல் இன்று வரையிலும் எங்களுக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்ற தலைவர் வைகோவுக்கு ஈழத் தமிழர்கள் சார்பில் இந்தப் பொன்னாடையை அணிவிக்கிறேன் என்று சொன்னார்.

தமிழ்நாட்டின் முதலமைச்சரும் அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரு தூதுக்குழு அமைத்து, டில்லி சென்று குடியரசுத் தலைவர், பிரதமர் மற்றும் கட்சித் தலைவர்களைச் சந்தித்து தமிழீழமா அல்லது இலங்கையுடன் சேர்ந்து வாழ்வதா? என்ற தலைப்பில் இலங்கையின் வடக்கு - கிழக்கு மாநில மக்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்தவேண்டும் என்று வலியுறுத்தவேண்டும்.

ஈழத்தமிழர் இனப்பொடு கொலைக் குற்றவாளிகளை, உலக நீதிமன்றத்தின் குற்றக்கூண்டில் நிறுத்த வேண்டும் மீண்டும் ஒரு படுகொலைத் தாக்குதல் நடைபெறாத வண்ணம், இந்தியா பாதுகாப்பு ஏற்படுத்தித் தரவேண்டும் அதற்கு, தலைவர் வைகோ அவர்கள் ஆவன செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இருவரும், ஈழத்தமிழர் பிரச்னை குறித்து, நீண்ட நேரம் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இரண்டு அல்லது மூன்று நாட்களில் பெற்றோலுக்கு வரிசை இருக்காது

கொழும்பு, மார்ச் 24

எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று நாட்களில் பெற்றோலுக்காக வரிசைகளில் காத்திருக்கவேண்டிய நிலை ஏற்படாது என்று இலங்கை பெற்றோலியக் கூட் டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்தார்.

நாட்டில் போதிய பெற்றோல் கையிருப்பு இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்திருந்த போதிலும் நேற்று நாட்டின் சில பகுதிகளில் பெற்றோலுக்கான நீண்ட வரிசைகள் காணப்பட்டன.

இது தொடர்பாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவரிடம் வினவியபோது, மேலும் ஒரு மாதத்துக்கு போதுமான அளவு பெற்றோல் கொள்வனவுக்கு அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும் தற்போது பெறறோல் மற்றும் டீசல் அடங்கிய மூன்று கப்பல்கள் கடற்பரப்புக்குள் இருப்பதாகவும் அதில் இரண்டு கப்பல்களில் இருந்து பெற்றோல் மற்றும் டீசல்கள் இறக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும், எதிர்வரும் நாட்களில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு போதுமான அளவு எரிபொருட்கள் விநியோகிக்கப்படவுள்ளன என்றும் அவர் கூறினார்.(அ)

## வாகன வருமான வரி பத்திரம் வழங்கும் நடவடிக்கை மந்தம்

கொழும்பு, மார்ச் 24

நாடளாவிய ரீதியில் வாகன வருமானப் பத்திரம் வழங்கும் நடவடிக்கை மந்தமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கணினி வலையமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே இந்த நடவடிக்கை மந்தமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)







## தூசு துகள்களின் செறிவு காற்றில் மீண்டும் உயர்வு

கொழும்பு, மார்ச் 24

நாட்டின் சில மாவட்டங்களில் மீண்டும் காற்றில் தூசு துகள்களின் செறிவு அதிகரித்துள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் புத்தளம் உள்ளிட்ட சில மாவட்டங்களிலேயே இவ்வாறு அதிகரித்துள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகத்தின் சிரேஷ்ட புவிசரிதவியல் நிபுணர் சரத் பிரேமசிறி தெரிவித்தார்.

குறித்த மாவட்டங்களில் தூசு துகள்களின் செறிவு 100 முதல் 150 இற்கு இடையில் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

வளிமண்டலத்தில் தூசு துகள்களின் செறிவு 100 இற்கும் குறைவாகவே காணப்படல் வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தெற்காசிய நாடுகளில் அதிகரித்துள்ள வளிமாசடைவினால் இலங்கையில் இந்த நிலை ஏற்பட்டுள்ளது எனவும் சுவாசக் கோளாறுடையவர்களை அதிக அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## வடமராட்சி கிழக்கில் உற்பத்தியாளர் சந்தை

வடமராட்சி, மார்ச் 24

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம், வட மாகாண தொழில்துறை திணைக்களம், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக உற்பத்தியாளர்கள் இணைந்து வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் முன்பாக உற்பத்தியாளர்கள் சந்தையை நேற்று நடத்தினர்.

சந்தையின் ஆரம்ப நிகழ்வு வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் கு.பிரபாகரமூர்த்தி தலைமையில் இடம் பெற்றது.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக உற்பத்தியாளர் சந்தையை வட மாகாண தொழில் திணைக்கள பணிப்பாளர் திருமதி வனஜா சம்பிரதாயபூர்வமாக நாடா வெட்டி திறந்து வைத்தார்.

இந்தச் சந்தையில் 10இற்கும் மேற்பட்ட உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திகளை சந்தைப்படுத்தினர். இதில், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக தலைமை கிராம செயலர் தவராசா, பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் ச. அரியகுமார், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம மக்கள் என பலரும் கலந்து கொண்டு பொருட்களை கொள்வனவு செய்தமையை அவதானிக்க முடிந்தது. (ஐ-2)

## இராணுவத்தின் கண்காணிப்பில் மண்ணெண்ணெய் விநியோகம்!

வடமராட்சி, மார்ச் 24

வடமராட்சி கிழக்கு கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மண்ணெண்ணெய் நிரப்பு நிலையத்தில் பொலிஸ் மற்றும் இராணுவப் பிரசன்னத்துடன் மண்ணெண்ணைய் விநியோகம் இடம்பெற்று வருகிறது.

ஒவ்வொரு மீனவருக்கும் தலா 20 லீற்றர் வீதமே மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. நேற்று முன்தினம் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடற்றொழிலாளர்களுக்கும், சமாச ஊழியர்களுக்கும் இடையில் இடம்பெற்ற முரண்பாடுகளை அடுத்து நேற்று பொலிஸ் - இராணுவத்தின் கண்காணிப்பில் மண்ணெண்ணெய் விநியோகம் இடம்பெற்று வருகிறது. (ஐ-2)

## கோழியும் இல்லை முட்டையும் இல்லை

கொழும்பு, மார்ச் 24

எதிர்காலத்தில் சந்தை தேவைக்கு ஏற்ப முட்டை மற்றும் கோழி இறைச்சி ஆகியவற்றை வழங்க முடியாது என அகில இலங்கை கோழிப்பண்ணை வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கால்நடை உற்பத்திகளுக்கான மூலப்பொருட்களின் தட்டுப்பாடு முட்டை மற்றும் கோழி இறைச்சியின் விலை அதிகரிப்புக்கு காரணமாக உள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்தார்.

தொழில்துறைக்கான மூலப்பொருட்களுக்கு தட்டுப்பாடு நீடித்தால் எதிர்காலத்தில் சந்தையின் தேவைக்கு ஏற்ப முட்டை மற்றும் கோழி இறைச்சியை வழங்க முடியாது எனவும் அவர் கூறினார். (அ)

## தென் எருவில்பற்று பிரதேச சபையின் புதிய உறுப்பினர் பதவிப்பிரமாணம்

மட்டக்களப்பு, மார்ச் 24

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபையின் புதிய உறுப்பினராக சுயேச்சைக் குழு உறுப்பினரான தங்கராசா ரவீந்திரன் நேற்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை தவிசாளர் டா.யோகநாதன் தலைமையில் 49ஆவது மாதாந்த அமர்வு நேற்று இடம்பெற்றது.

சுயேச்சைக் குழுவில் ஏற்கனவே உறுப்பினராக இருந்த தியாகராசா தேவரஞ்சன் என்ற உறுப்பினர் காலமாகியதையடுத்து, அந்த இடத்துக்கு புதிய உறுப்பினராக தங்கராசா ரவீந்திரன் தேர்தல் ஆணையாளரால் நியமிக்கப்பட்டிருந்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.03.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் உளவள துனையாளர்
திரு.நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி-ஜோன்சன்
ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர்
விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ - மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-உத்தம புத்திரன்,
வெண்ணிலா கபடிக்குழு
திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான
நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை - FIR

**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்



7.30 மணி : வெள்ளிடை நுட்பம்-
தொழில்நுட்பம் பயன்பாடுபற்றிய நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : கச்சேரி ஆரம்பம்
10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
(மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை
(சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை
(திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம்
(மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு